# பெண்ணின்குரல்

மார்ச் 2004 இதழ் 28 ISSN 1391- 0914 விலை 20/=

பெண்களின் உரிமைக்கான இலங்கைச் சஞ்சிகை



## துஷ்பிரயோகத்துக்குள்ளாகும் வாழ்க்கை

01|12|2004
நூலகம்

## பொருளடக்கம்


- கட்டுமீறிய சமுதாயம் 2
- தகாப்புணர்ச்சி 5
- ஆரோக்கிய அழிவை நோக்கி 6
- பெண்கள் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் 11
- சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக பொலிஸ் சேகரித்துள்ள புள்ளிவிபரம் 12
- பாலியல் பாதிப்புக்காளான அபலைச் சிறுமிகள் 13
- வல்லுறவும் சட்டமும் 15
- நச்சுப்புழுக்கள் (சிறுகதை) 16
- பெண்களுக்கான சட்ட உதவி 21
- பெண்களுக்கெதிரான பாரபட்சங்களை ஒழிப்பதற்கென உருவாக்கப்பட்ட சட்டங்கள் 27
- பலாத்காரப் பயங்கரம் 31
- பிரம்மனுக்கோர் மனு (கவிதை) 32



*ஆசிரியர்*
பத்மா சோமகாந்தன்

*முகப்பு ஓவியம்*
சந்திரகாந்தி

*சித்திரங்கள்*
ஜானகி சமந்தி & சேகர்

*கணினி அமைப்பு*
சா. பாலகுமார்

*அச்சுப்பதிவு*
ஹைரெக் பிறின்ற்ஸ்


*ஆதரவளிப்பு :* SIDA

மார்ச் 2004

ISSN 1391 - 0914

**வெளியீடு :**
பெண்ணின் குரல்
21/25, பொல்ஹேன்கொட கார்டின்ஸ்,
கொழும்பு - 05. தொலைபேசி : 4407879


## சீரழிவுக்குள்ளாகும் பெண்களின் வாழ்க்கை



இந்த உலகம்க இனிமையானது; அழகானது; ஆரோக்கியமானது என ஆன்மீக ஞானிகளும், கவிஞர்களும் சித்தரிக்கிறார்கள். ஆனால் உலகச் சனத்தொகையில் சரிபாதியினராக விளங்கும் பெண்களைப் பொறுத்தவரை அவர்களின் வாழ்க்கையின் நிலைமை எதிர்மாறாகவே அமைந்திருக்கிறது.

ஆணாதிக்கக் கொடுரங்கள், அவளின் உரிமைகளை மூர்க்கத் தனமாகத் தட்டிப் பறித்து தாமே சுகித்து அனுபவிப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதை அநேக சந்தர்ப்பங்களில் காண முடிகிறது. மனைவியென்பவள் அவனுக்குள்ள சகல உணர்வுகளும் உரிமைகளும் கொண்ட சக மனுஷியே என்பதை மனதிலிருந்து துடைத்தெறிந்து விட்டு ஆண் என்ற அதிகார மமதையுடன், அவள் மீது புரியப்படும் வன்முறைகள், வக்கிரப்பாலியல் வதைகள் சித்திரிப்புக்களில் அடக்க முடியாதவை. குடும்பம் என்ற கூட்டுக்குள் பெண்களை அடக்கி வைத்து இரத்த உறவு முறை ஆண்கள் கூட அவள் மீது மேற்கொள்ளும் பாலியல் கோரங்கள், கொடுமைகள் எத்தனை! எத்தனை!

ஜனத்தொகை உலகில் பெருகப் பெருக, பெண்களுக்கெதிரான குற்றச் செயல்களும் வானைத் தொடுமளவுக்கு உயர்கின்றன!

ஜனநாயக முறையில் தட்டிக்கேட்டு குற்றவாளியைத் தண்டிப்பதற்குச் சட்டங்களிருக்கின்ற போதிலும் பெண்களைப் பொறுத்தவரை அவை எட்டாக் கனிகளாக உயரத்திலேயே தொங்கிக் கொண்டிருக்கின்றன. இந்நிலைமையை நீடிக்க விடக்கூடாது. பெண்கள் துணிச்சலுடன் நிமிர்ந்து நின்று பெண்கள் உதவி அமைப்புக்கள், சட்ட உதவி வழங்கும் நிறுவனங்கள் முதலியவற்றினூடாக, தமக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பாகுபாடுகள், பாரபட்சங்கள், பாலியல் தொல்லைகள் முதலியவற்றிற்குத் தீர்வுகாண முன்வர வேண்டும்.

பெண் அமைப்புக்களின் நீண்ட காலப் போராட்டத்தின் பயனாக சட்டங்களிலும், நிர்வாகத் துறைகளிலும் பெண்ணின் பாதுகாப்புக்கும், உரிமைகளுக்குமாக ஓரளவு எய்தப்பெற்றுள்ள வழிவகைகளை செல்வாக்குள்ள சிலர் மட்டுமே பயன்படுத்திக் கொள்ளாமல், அவற்றைப் பாதிக்கப்பட்ட பெண்கள் சகலரும் பயன்பெறும் வகையில் பரவலாக வெளிப்படுத்த வேண்டும்.

பாரம்பரியச் சம்பிரதாயம், பண்பாடு, குடும்ப கௌரவம் என்பவற்றுக்குப் பாதிப்பு ஏற்படுமே என எண்ணி, தம்மீதான வன்முறை வதைகளை தாங்கிக் கொண்டு மௌனமாக வாழ்நாள் முழுவதும் வேதனையுடன் தேம்பி அழும் பெண்களுக்கு விடிவு வேண்டும். அது தானாக வராது; அதற்கான சட்ட வழிமுறைகளைத் துணிச்சலுடன் தேட முனைய வேண்டும். சுமுகமாகக் கலந்துரையாடி, புரிந்துணர்வுடன் சுமையை இறக்கி வைக்க எத்தனித்தும் பார்க்கலாம்.

எமது இதழ் நீண்ட காலமாக வன்முறைகளை வெளிப்படுத்தி வலியுறுத்தி வருவதன் நோக்கம் பெண்கள் வாய்மூடி மௌனிகளாக கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பதற்காக அல்ல; நிவாரணம் பெறுவதற்கான சரியான வழியை நாடுவதற்காகவே!

காமவெறிக் கழுகுகள் பெண்களைக் கொத்திக் குதறி சீரழிக்கப்படுவதிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள் துரிதமாகச் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

பத்மா சோமகாந்தன்.

# கட்டுமீறிய சமுதாயம்

பெய்த். ஜே. இரத்னாயக்கா

நாம் வாழும் இவ்வுலகு வன்முறை கொண்டதாகி விட்டது. மனிதர்களின் சண்டித்தனமான போக்குகளின் விளைவுகளை வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் எம்மால் கண்டனுபவிக்கக்கூடியதாயிருக்கிறது. சமுதாய அமைப்புக்கும் பாரம்பரியத்திற்கும் மதிப்பளிக்காமல் மனிதர்கள் புரிகிற காரியங்களால் கீழிறங்கி விட்டனரென்பதால், தீமைக்கு எதிராக நாம் உள்ளும் புறமும் போராட வேண்டிய மோசமான நெருக்கடியிலிருக்கின்றோமென்ற உண்மை நிலையை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

மனித வாழ்க்கையின் அர்த்தம் என்ன என்பதை நாம் புரிந்து கொள்வதில்லை. வாழ்க்கை முடிவடையும் தறுவாயிலேயே அதை உணர்கின்றோம். வாழ்க்கை அனுபவங்கள் வரலாற்றின் அங்கமாகும் போதே அவற்றின் அர்த்தத்தை உணரமுடிகிறது. மனிதவாழ்க்கை எவ்வாறிருக்க வேண்டுமென்ற தகுதியான பொருத்தப்பாட்டை அறிந்து கொள்வதற்கு சமயங்களும் தத்துவங்களும் எமக்குத் துணைபுரிக்கின்றன. பிரபஞ்சத்தின் இயைபுக்கு அதன் முழுமைக்கு ஒத்திசைவானதாக எமது வாழ்க்கை அமைந்திருக்க வேண்டியது அவசியம் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஒழுங்கு முறையான பிரபஞ்சக் கட்டமைப்பில் மனிதக் குடும்பங்களும் இன்றியமையாத அங்கமாகவேயுள்ளன. மனிதர்களின் வாழ்க்கை நாகரீகத்தன்மையும் முரண்பாடுகளும் கலை உணர்வு வெளிப்பாடுகளும் இணைந்தவையாகவே அமைந்துள்ளது. நாடோடிகளாயிருந்த முற்காலத்தில் மனிதர்களிடமிருந்த உணர்வுகள், ஆக்கிரமிப்பு, சண்டை போன்றவற்றிற்கு இட்டுச்சென்றன. இவற்றின் விளைவால் ஒழுங்கமைப்பான சமூகங்களாக குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர். முடிவில் இது நிலஆட்சி சார்ந்த சண்டைகளுக்கு சென்றது. மனிதர்கள் எவ்வளவு விசித்திர பிராணிகள்! பேராசை, விஞ்சமுடியாத சுயநலம், விட்டுக்கொடுப்பும், கடப்பாடும், கோரமான குற்றமிழைக்கும் தன்மையும் இயல்பான நற்குணமும், கபடச் செயலும், நற்குணமும் ஆகியவை இணைந்த ஒரு கலப்பு விசித்திரப் பிராணியாக மனிதன் விளங்குகின்றான்!.

மனித இனம் இயற்கையினதும், பிரபஞ்சத்தினதும் நியதிகளுக்குப் பணியாமல், அவற்றின் சமநிலையைக் குழப்பி அடிப்படைத் தத்துவக் கோட்பாடுகளுக்கும், கட்டளைகளுக்கும் முரணாக நடக்குமெனில், அக்கோட்பாடுகளுக்கு அநீதி இழைப்பவர்களாவதுடன், எமக்கும் ஏனையோருக்கும் தீமையை உண்டாக்குபவர்களாக நேரிடும். இன்றைய உலகில் காணப்படும் தீமைகளின் அளவுக்கு இணை இல்லை. அவற்றால் ஏற்படப் போகும் விளைவுகள் பாரதூரமானவை. எனவே புதிய உலகப் படைப்பொன்றினால் மட்டுமே இதனைத் தீர்க்க முடியுமென எண்ண வேண்டியுள்ளது. தீமை எமது உள்ளத்தில் பலமாக வளர்ந்து விட்டால், நாம் அதனை ஒதுக்கி ஒழித்து விட முடிவதில்லை. அது மீண்டும் அதிக வலுவுடன் நெஞ்சில் குடியேறி விடும். அதிகாரம் செல்வ அந்தஸ்து என்பவற்றை நாம் எமது சுய திறமையினால் பெற்றவை என துரதிர்ஸ்டவசமாக கருதிக் கொள்கிறோம். அதிகாரமும் செல்வமும் பெருமளவில் சேர்ந்துள்ளதென்பதால், கிடைத்த அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தும் உரிமையும் கிடைத்துள்ளதாகக் கருதமுடியாது.

வன்முறைகளுக்கான காரணங்களை ஆராயும் போது எடுத்துக் காட்டமைப்புக்கள் பல வெளிப்படுகின்றன. தனிப்பாசத்துக்குரிய விசேட சலுகை, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கு மிடையே முரண்பாடு, பழிதூற்றல், மோசடி, வாழ்வின் விழுமியங்களைப் பற்றிய மாறாட்ட நடவடிக்கை, பழக்க நடத்தை முதலியவை வீட்டில் குடும்பங்களுக்கிடையிலேயே நிலவுகின்றன. இவை அயலவர்களுடன், பாடசாலைகளில், கல்வி நிலையங்களில், வேலைத்தலங்களில் என வியாபித்துப் பரவுகின்றன. பொதுநன்மைக்காக சமூகத்தை ஒழுங்கு செய்யவென அமைக்கப் பெற்ற அமைப்புமுறைகளிலிருந்தே வலுச் சண்டைக்குப் போதல், ஊழல் முதலியவை பொதுமக்கள் மீது பாய்கின்றன. பொதுநிதியையும் பொதுச் சொத்துக்களையும் தவறாகக் கையாளுதல், பணமோசடி செய்தல், அரசியல் சலுகைகள், புரட்டுத்தனங்கள், வஞ்சகச் செயல்களைக் கண்ணுற்ற ஜனங்களின் மனங்கள் மரத்துப் போய் தடைப்பட்டு நிற்கின்றன. இவற்றை எதிர்த்து நின்று, கடமையை நிறைவேற்றி

நூலகம்



நேர்மையை நிலைநாட்ட அபாரமான துணிச்சல் அவசியம்.

சட்டங்களுக்கு அடங்காத மரத்துப்போன மனங்கள், இழிந்த செயல்களுக்கே இட்டுச் செல்லும். சாதாரண துர்நடத்தைச் செயலானது மனக்குழப்பம், அதிருப்தி, வலிந்து சண்டை பிடித்தல் போன்றவற்றிற்கு இட்டுச்செல்லும். கௌரவமான மனிதர்களால் எதிர்த்துப் போராட முடியாத அல்லது பின்வாங்குகிற காரணத்தினாலேயே மற்றவர்களிடம் அச்சமூட்டுகின்ற கொலைக்கலாசாரம் தலையெடுக்கின்றது. அச்சம், தனிமை, வறுமை கையறுநிலை முதலியவை எம்மீது புரியப்படும் வன்முறை அறுவடைகளாக விளங்குகின்றன.

அரசியல் குழப்பங்காரணமாக லஞ்சமும், ஊழலும் ஏற்படுகின்றன. ''மாபியா''ப் பாதாள உலகக்குழுக்கள் கொழுத்து வளர்கின்றன. வீடுகள் மீதும் வர்த்தக நிலையங்கள் மீதும் பயிற்சி பெற்ற போர்வீரர்கள் பயங்கர ஆயுதங்கள் சகிதம் படைகளிலிருந்து தப்பி ஓடிவந்து அட்டகாசமும் அழிவுகளும் புரிகின்றனர். உரிய பாதுகாப்பில்லாமையால் எங்கள் சொந்த இல்லங்களிலேயே பயங்கரப் பீதியுடனே வாழ வேண்டியுள்ளது. இவற்றின் விளைவாக குடும்ப வாழ்க்கை நொறுங்கிப் போகிறது; ஒழுக்கக்கேடு பெருகுகிறது; அயலவர்களின் பகைமை வளர்கிறது; பொதுவாழ்க்கையின் தரம் சீரழிகிறது.

மக்களிடையே வன்முறை தொடர்பான கூடுதலான செய்திகளை பரப்பிவருவதில் ஊடகங்கள் பொறுப்பாயுள்ளன. தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் வன்முறைக் காட்சிகள் எமது உணர்வுகளை அதிகளவு ஊறுபடுத்தி தாக்கத்தை ஏற்படுத்தும் தன்மை கொண்டவைகளாக விளங்குகின்றன. செய்தி ஒளிபரப்புகள், பொழுதுபோக்கு அம்சங்கள், பகைமை, கொடுவெறிக்காமம், படுகொலைகளென தினமும் எம்முன்னால் படைக்கப்படுகின்றன. உணர்ச்சிகளை நிலைகுலைவிக்கும் பாங்கான அரைநிர்வாண ஆட்டக்காட்சிகளைக் கொண்ட ஒளிநாடாக்களின் இசை போதைவஸ்துக் கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்றன. ஏனைய பல நாடுகளைப் போலவே எம்நாட்டிலும் ''பொப்'' கலாசார ஆக்கிரமிப்புக்கு தாராளமாகக் கதவைத் திறந்து விட்டிருப்பதனால், எமது ஒழுக்க தத்துவமும் பண்பாட்டு விழுமியங்களும் அழிவுக்கு ள்ளாகின்றன.

ஆபாச சஞ்சிகைகள், புகையிலைப் பொருட்கள் மற்றும் மது தொடர்பான பிரசாரங்கள் கலாரூபப் போர்வை போர்த்திக் கொண்டு 'அமைதி'யை நாடி அந்தரப்படும் எமது பிள்ளைகளின் இளம் உள்ளங்களில் எளிதாகப் பதியும் வண்ணம் நடை பெறுகின்றன. உயர்தர ஹோட்டல்களினாலும் வர்த்தக ஸ்தாபனங்களினாலும் கொண்டாடப் படும் சமய கலாசார விழாக்களில் அடிக்கடி மதுபாவனை கட்டுமீறிய வழக்கமாக நடைபெறுகிறது. பிரபல கல்லூரிகள் நடத்தும் விளையாட்டுப்போட்டிகள் குடிவெறியினாலும் காடைத்தனத்தாலும் குழப்பத்தில் முடிகின்றன. சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவோர் போட்டியில் வெற்றி பெறுவதற்காக போதைவஸ்துகள் மூலம் தமக்கு வலுவேற்றிக் கொள்ள முயற்சிக்கின்றனர். தேசிய மட்டத்தில் போட்டிகளை ஏற்படுத்தி நடத்துவோர் களுக்கும் அதில் பங்குபற்றுபவர்க ளுக்குமிடையே படுகேடான நட்புத் தொடர்பு ஏற்படுகிறது. இதன் விளைவாக பாதுகாப்பற்ற வீடுகளும் வீதிகளுமான அல்லோல கல்லோலக் காட்சிகள் பெருகிவருகின்றன.

திறந்த சுற்றுலாக் கொள்கையினாலும் ஆபாசங்களை பார்க்கக்கூடிய இணையத் தளங்களைக் கொண்ட நிலையங்களினாலும், சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகஞ் செய்வதில் நாட்டங் கொண்ட காமவெறியர்கள் நம் நாட்டிற்கு வந்த வண்ணமுள்ளனர். சிறுவர் பாதுகாப்பு நிறுவனங்களின் தீவிர முயற்சிகளையும் மீறிக் கொண்டு இவ்விஷயம்

இடம் பெறுகிறது. அதே வேளை சிறார்களுடனும் மனைவிமார்களுடனும் முறை தகாப்புணர்ச்சியில் ஈடுபடுவது தவறு என நிலைநாட்டப்பட்டிருகிறது. எனினும் தமது குடும்பத்திலுள்ளோரைக் காப்பாற்ற வேண்டிய அத்தியாவசியக் காரணத்தால் வெளிநாடுகளுக்குத் தொழில் தேடிச் செல்லும் பெண்கள் பெரும்பாலும் அங்கு அடிமைகளாகவே பணிபுரிகின்றனர். இவ்வாறு மனைவிமாரை வெளிநாட்டு வேலைகளுக்கு அனுப்பி விட்டு, வீட்டில் இருக்கும் ஆண்கள் விரக்தியுற்று விடுவதால் தமது பெண்பிள்ளைகளுடன் வல்லுறவு பூணுவதும், பையன்களெனில் தகாப்புணர்ச்சி கொள்வதும் பெருகிவருகின்றன. குடும்ப வாழ்வின் அத்திவாரமே ஆட்டங்கொள்வதனால், சமூகம் உள்ளேயே உக்கி அழிந்து கொண்டிருக்கிறது. எமது பிள்ளைகளுக்கு அளவுக்கதிகமான புலன்களால் அனுபவிக்கக்கூடிய உயர்விலைப் பொருட்களை அளித்து அவர்களைத் திருத்திவிட எண்ணுகிறோமே தவிர, அவர்களுடன் அதிகளவு நேரத்தைக் கழித்து அவர்களைக் கவனித்துக் கொள்வதில்லை என்பதனால் இவ்வாறான சீரழிவுகளுக்கு எம்மை நாமே நொந்து கொள்ள வேண்டும்.

இரக்க உணர்ச்சி சிறிதுமேயில்லாத ஒரு சமூகம் தனது இயலாதவிடயத்தில் கால்பதிக்க எத்தனிக்கிறது. கருணையுடன் கூடிய தர்மமான சிறிய செயல்கள் சிறந்த விளைவை உண்டாக்கக்கூடியவை. எமது நாட்டில் ஆலோசனை கூறி நல்வழிப்படுத்தும் தொண்டு நிலையங்கள் மட்டுப்படுத்தப்பட்டள வேயுள்ளன. குழப்பமான மனநிலையிலுள்ள பலரை உளவியல் ரீதியாக நடத்துகின்ற வசதிகள் பலருக்கு கிடைக்காமையால், அவர்கள் முரட்டுத்தனமான முடிவுகளை நாடுகின்றனர். உலகிலேயே எமது நாடு தற்கொலை புரிபவர்களில் முதலிடம் வகிக்கின்றது. ஒரு லட்சம் பேரில் 55 பேர் இங்கு தற்கொலை செய்து கொள்கின்றனர். உலகில் தற்கொலை புரிவோரின் சராசரித் தொகையில் இது மும்முடங்காகும். காதலில் அல்லது முக்கிய பரீட்சையில் தோல்வியுற்ற இளம் தலைமுறையினர் தொடக்கம் தமது முயற்சியினால் பெற்ற விளைச்சலை விற்கவோ அறுவடை செய்யவோ முடியாத நிலையிலுள்ள விவசாயிகள் வரை தற்கொலையிலீடுபடுகின்றனர்.

நாடெங்கும் நடைபெறும் அவசர அவசரமான நகரமயமாக்கல் எமது அவலங்களுக்கான காரணங்களில் ஒன்று.

சென்ற மார்ச் 2003ல் கொழும்பு மாநகரை பெண்கள் மற்றும் சிறார்களின் நேசமான நகராக்குவதென்ற இயக்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. பொதுச்சுகாதார மேம்பாடு, முறிந்த குடும்பங்களினாலும் சமூக முறைமைகளினாலும் ஏற்பட்ட அழிவுகளைத் தடுப்பதற்கான வழிவகைகள், முதலியவற்றை மேம்படுத்தி, தலைநகரை நவீன வசதிகளுள்ள நகராக ஆக்க வேண்டுமென்ற நோக்கத்தில் இவ்வியக்கம் தொடங்கப்பட்டது. ஆனால் குடும்ப வன்முறைகள் நிலவுவது கொழும்பிலே தான் மிக அதிகமாகக் காணப்படுகிறது. பாலியல் வல்லுறவு, தகாப்புணர்ச்சி, கொலை, தொல்லைப்படுத்தல், பாலியல் துஷ்பிரயோகம், குடும்ப அங்கத்தவருக்கு அல்லது வேலைகாரருக்கு எதிரான வீட்டு வன்முறை, மற்றும் தொழில்தருநர்களின் வன்முறைகள் என்பவற்றிற்குத் தீர்வு காணும் வகையில் கொண்டுவரப்பெறவுள்ள வீட்டு வன்முறை ஒழிப்புச் சட்டம் விரைவில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட வேண்டும். கொழும்பு மாநகர சபையின் ஒரே பெண் அங்கத்தவராக விளங்கும் ஷர்மிளா கோணவல அவர்களினால், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிரான துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான குழு ஏற்படுத்தப்பட்டது. INFORM அமைப்பின் நிர்வாக இயக்குனரான சுனிலா அபேயசேகரா அவர்கள், பெண்களுக்கும் சிறுவர்களுக்குமான சேவையை வழங்கும் வழிவகைகள் அவர்களுக்குப் பரவலாகவும் எளிதாகவும் கிடைக்கும் போதே, கொழும்பு நகரம் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் பாதுகாப்பானதாக அமைய முடியும் எனக் குறிப்பிடுகின்றார். தற்போதுள்ள சட்டங்களைப் பற்றி பெண்கள் அமைப்புகள் பரவலாக அறிந்துள்ள போதிலும், கலந்து பேசி அறிவுரை பெறுவதற்கும், சட்ட உதவிகள் பெறுவதற்குமான வாய்ப்புக்களே அவசரத் தேவையாக உள்ளன.

இருபது ஆண்டு காலம் தொடர்ந்து நடைபெற்ற உள்நாட்டுப் போர் ஏற்படுத்திய மோசமான விளைவுகளை விஸ்தரிக்க இங்கு இடம் போதாது. இந்த யுத்தம் ஏற்படுத்திய அதிர்ச்சிகளினாலும், இடம்பெயர்வுகளினாலும், மனப்பாதிப்புக்களினாலும் பாதிக்கப் பட்டவர்களுக்கு சிறந்த யோசனைகளும், புத்திமதிகளும் வழிகாட்டல்களும் அளிக்கப்படுவது அவசரத் தேவையாகும். கிராமங்களிலும் பெருந்தோட்டப் பகுதிகளிலும் உள்ள சிறுவர்களுக்கு தகுந்த உணவு, உடை, கல்வி போன்ற வசதிகள்

கிடைக்காமல், அடிமைகள் போன்ற நிலைமையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவற்றோடு இவர்களின் பெற்றோர் மதுப்பழக்கத்தில் மூழ்கியுள்ளமையால், முழுத்தேசத்திலும் சமூக, பொருளாதார கட்டமைப்பில் இவை செறிந்து பரவியுள்ளமையைக் காணலாம். வேகமான நகரமயமாக்கல், செய்தி மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் என்பவற்றுடன் பூகோளமயமாக்கலும் இணைந்து சிவில் சமூகத்தில் தடுமாற்ற நிலைமையை தோற்றுவித்துள்ளன. சமாதானம், நீதி என்பவற்றின் பெறுமானங்கள் இழிநிலைப் படுத்தப்படுகின்றன; இதனால் ஏழைகள், பொருளில் லாதவர்கள், ஒதுக்கப்பட்டவர்களே இவற்றிற்கு முதலில் பலியாட்களாகின்றனர். தனியாட்களும் அமைப்புக்களும் இணைந்த சமூகம் இச்சவால்களுக்கு முகங்கொடுத்து சகல வடிவத்திலான அநீதிகளையும் சகிப்புத்தன்மையற்ற செயல்களையும் எதிர்த்துப் போராட வேண்டும். அன்பும் இரக்கமும் மேலானதன்மை கொண்டவை. அவை கடைப்பிடிக்கப்படாவிடில் நாம் வன்முறைக்குப் பலியாகி விட நேரிடும். ஞாபக சக்தி முக்கிமானதென்ற போதிலும், நவீன தொடர்பூடகங்கள் எமக்கு நெருக்கமாக இருப்பதனால், இயல்பாக எமக்குள் இருக்கும் ஞாபகசக்தி மழுங்கடிக்கப்படுகின்றது. சமூகத்திலிருக்கும் ஆபத்துகளை நாம் இனங்கண்டு அவற்றைக் களைய வேண்டும். பெரும்பாலான மக்கள் தாம் விரும்புபவற்றைச் சுதந்திரமாகத் தேர்ந்து கொள்ளும் பாக்கியம் பெற்றவர்களாக உள்ளனர். எமது சுபாவங்களும், சூழ்நிலைகளும், தனிமனிதர் களாகவும், குழுக்களாகவும் நாம் நாடி நிற்பவற்றில் நமது தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இன்றைய வாழ்க்கையில் காணப்படும் கொடுமைகள், துரோகச் செயல்கள், அடக்கு முறைகள் என்பவற்றை மட்டுப்படுத்தி ஈடுகொடுக்க ஆன்மீகக் கூருணர்வுத் திறனும் வளர்ச்சியும் அவசரமாகத் தேவைப்படுகின்றன.

எமது சகமனிதர்களையும் மற்றும் பிராணிகளையும் மனித நேயமற்ற வகையில் அடக்கித் தடுக்கும் மிலேச்சச் செய்கைகளையும் இயற்கை அன்னையின் வளங்களை ஊறுபடுத்துவதையும் உணர்ச்சி வசப்படாமல் சும்மா உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? இவற்றை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் வாளாவிருந்தால், மனிதப்பண்பு கொண்டவர்கள் என்பதற்கே நாம் தகுதியற்றவர்களாகி விடுவோம்.

## தகாப்புணர்ச்சி

சிறுவர் பாலில் துஷ்பிரயோக வழக்குகளில், பெரும்பாலானவை தகாப்புணர்ச்சிச் சம்பவங்களாக உள்ளன. நாம் பரிசீலித்த 365 வழக்குளில் 28 வழக்குகள் தகாப்புணர்ச்சி சம்பந்த மானவை என அறிய முடிந்தது. 327 வழக்குகளில் இளம்பெண்களை பாலியல் துஷ்பிரயோகஞ் செய்த குற்றவாளிகளில் 4 பேர் இப் பெண்களின் சிறிய தந்தை முறையானவர்கள், 4 பேர் சகோதரர்கள், 2 பேர் தாத்தாமார்கள், 18 பேர் தந்தைமார்களாக அடங்கியிருந்தனர். தந்தைமாரால் தகாப்புணர்ச்சி செய்யப்பட்ட இளம் மகள்மார் தொடர்பான 18 வழக்குகளில் 15 குற்றவாளிகளின் மனைவிமார் அதாவது இவ்விளம் பெண்களின் தாய்மார் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில்புரியச் சென்றுள்ளனர் என்பது தெரியவந்தது. பலவழக்குகளில் தந்தை, தனது இரண்டு அல்லது மூன்று மகள்மாரை மாறிமாறி தகாப்புணர்ச்சி கொண்டிருக்கிறார். மற்றொரு வழக்கில் தமது கூடப்பிறந்த சகோதரியை, 15 மற்றும் 19 வயதுள்ள இரு சகோதரர்கள் பாலியல் வல்லுறவு புரிந்துள்ளனர். பின்னர் ஒரு சகோதரன் தற்கொலை புரிந்து விட்டான்.

இவ்வழக்குகளை நாம் ஆராயும் பொழுது சிறுமிகள் மீதும், இளம்பெண்கள் மீதும் வல்லுறவு புரிந்தவர்களில் பெரும்பாலானோர் அறிமுகமில்லாதவர்களோ, வெளிஆட்களோ அல்லர். அக்குடும்பத்திலுள்ள ஆண்கள் அல்லது நெருங்கிய உறவினர்கள் என்பது அம்பலத்திற்கு வந்துள்ளது. 327 வழக்குகளில் தண்டனை பெற்றவர்களில் 18 பேர் வல்லுறவுக்கு உள்ளான சிறுமிகளின் தந்தைமார், இருவர் தாத்தாமார், நால்வர் உடன்பிறந்த சகோதரர்கள், 7பேர் தமக்கைமாரின் கணவர்கள், 4 பேர் சிறிய தந்தைமார், 15 பேர் மாமன்முறையானவர்கள்.

*- சிறுவர்கள் உரிமைகள் மீறல் தொடர்பாக மனித உரிமைகள் அமைப்பின் சட்டத்தரணிகளின் அறிக்கையிலிருந்து*

# ஆரோக்கிய ஆயுளை நோக்கி மறைவாக நடக்கும் வதைகள்

ஐக்கிய அமெரிக்க நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தினால் பாதிப்புற்றவர்களில் சுமார் ஐந்தில் ஒரு பங்கினர் உளவியல் தொடர்பாக பாதிப்புகளுக்குள்ளாகியுள்ளனர் என்பதற்கான சான்றுகள் வெளியாகியுள்ளன. அவர்களிடமும் காணப்படும் தொடர்பில்லா மறுமொழிகள், மற்றும் சீர்கேடான உளஎழுச்சி, மனக்கிலி, முன்னிகழ்ச்சிகளின் பதிவுகள், உணர்ச்சி வயப்பட்டு மரத்துப் போதல் போன்ற வெளிப்பாடுகளினால் இவற்றைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. பூர்மானும் மற்றும் ஆய்வாளர்களும் லொஸ்ஏஞ்சசில் உள்ள கொள்ளை நோய் பற்றிக்கொள்ளும் பகுதியில் பல்வகை உத்திகளைப் பயன்படுத்தி மேற்கொண்ட கணக்கீட்டின்படி, சிறுவர்களைப் போல பாலியல் துஷ்பிரயோகத்திற்கான பெண்களின் எண்ணிக்கை சோடியாகச் சேர்ந்து வாழ்கின்ற போதிலும் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகாத பெண்களிலும் பார்க்க இரட்டிப்பாக இருக்கின்றது என்பதை தெரிந்து கொள்ள முடிந்தது. துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களின் வீதம் 58.6; அவ்வாறு ஆகாதவர்களின் வீதம் 24. துஷ்பிரயோகத்திற்குள்ளானவர்கள் வாழ்க்கை முழுவதிலும், குறைந்தது ஒரு மனநோய் அறிகுறியை யாவது கொண்டுள்ளனர். தந்தைமார் அல்லது சிறிய தகப்பன்மார் மகள்மாரின் பிறப்புறுப்பில் தாக்கமேற்படும் வகையில் துஷ்பிரயோகஞ் செய்வது மற்றும் அவர்களின் வலிமையான பாலியல் தொந்தரவுகள் இப் பெண்பிள்ளைகளிடம் நீண்ட காலத்துக்கு தீங்கான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகியவரின் உடல்மற்றும் உணர்வு ரீதியாக ஏற்பட்ட விளைவுகள் வேறுபடுத்திக் கண்டறிய முடியாது. நீண்ட கால உளவியல் சிக்கல்களை, உடல் ரீதியான நோயாக பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக் கொண்டு எடுத்துக் கூறிக் கொண்டிருப்பதே அதன் காரணமாகும். சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தால் உடல் சார்ந்து ஏற்பட்ட விளைவுகளைப் பற்றி வரையறைக்குட்பட்ட ஆய்வொன்றை மேற்கொண்டபோது, அப்பாலியல் துஷ்பிரயோகத்தினால், குண்டிக்காயின் உட்குழிவின் அடிப்பகுதியில் நாட்பட்ட நோ, தலையிடி, ஆஸ்துமா, மற்றும் பெண்களுக்குரிய நோய்ச் சிக்கல்கள் ஏற்பட்டிருப்பது தெளிவாகியது. மேலும் இரைப்பையின் ஒழுங்கீனம், குடல் எரிச்சல் போன்ற நோய்த்தன்மைகளும், அடிவயிற்றில் நீடித்த நோ என்பன பாலியல் துஷ்பிரயோகத்துடன் தொடர்புள்ள நோய்களாக கண்டு அறியப்பட்டுள்ளன. இவை நோய்த்தொற்று வகையென முழுமையாக நிறுவப்படாத போதிலும், ஆண்களிலும் பார்க்க கூடுதலாக பெண்களே இவ்வகை நோய்களுக்கு அடிக்கடி ஆளாகின்றனர். அதனால் அவர்களில் கணிசமானவர்கள் உடல்நலத்திற்கும் பொருளாதாரத்திற்கும் பாரமாக விளங்குகின்றனர். ஐக்கிய அமெரிக்க நாடுகளில் ஆரம்ப மருத்துவக் கவனிப்பு மற்றும் குடல்சார் வைத்தியத் தொழில்முறைப் பணிகளில், பொதுவாக அதிகளவு நீண்டகாலக் குடற்பைக் கோளாறுகளை அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது.

சிறுவயசில் உடலுறவால் பாதிப்புற்ற பெண்கள், தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் ஆற்றலில்லாதவர்களாயும், தமது மதிப்பைப் பற்றி நிச்சயமற்றவர்களாயிருப்பதுடன் தமது சொந்த முடிவைத் தெரியாமல், பெண்களாக இருப்பதனால் வாழ்க்கையில் பாலியல் பலிக்கு கூடுதலான பொருத்தமுள்ளவர்கள் தாமே என எண்ணிக் கொண்டு அதனை அங்கீகரித்து ஏற்றுக் கொள்கின்றனர். இத்தகைய விளைவுகளினால் எதிர்காலத்தில் பாலியலுக்குப் பலியாகும் வாய்ப்புக்கள் பெண்களிடம் அதிகரிக்கக்கூடும். கல்லூரி மாணவிகள் மத்தியில் வல்லுறவுக்கான இடர்பாடுகள் அதிகரித்துக் காணப்படுவதற்கும் சிறுபராயத்தில் உளஅதிர்ச்சிகளூட்டும்படியான பாலியல் அனுபவங்களுக்கும் தொடர்பு உள்ளன. சிறுபராயத்தில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு பலியாட்களாகிய சிறுமிகளில் 49 வீதமானவர்கள், வளர்ந்தவர்களுடன் உடற்தொடர்பு பூணும் போது தகர்த்து நொருக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை பிறியர் என்பவர் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்திய ஆய்வின் உதாரணங்களிலிருந்து அறிய முடிகிறது. றசல் என்பவர் மேற்கொண்ட ஆய்வொன்றில் தகாப்புணர்ச்சிக்குள்ளான சிறுபராயத்தினரில் 68 வீதமானவர்கள் பெண்ணுறுப்பில் வல்லுறவு புரியப்படுத்தப்பட்டவர்கள் எனத் தெரிவித்துள்ளார்.

சிறுவயதில் பாலியல் உறவுக்குப்

பலியானவர்கள் பின்னர் வளரிளம் பருவத்திலும், வளர்ச்சியுற்ற வயதிலும் அதிகளவு போதைவஸ்து, மற்றும் மதுப்பழக்க ங்களுக்கும், பலபேருடன் பாது காப்பற்ற முறை யிலான உடலுற வுக்கும், விபசாரம், இளம்பராயத்தில் கர்ப்பம் முதலிய பேரிடர்களுக்கும் உள்ளாகின்றரென அண்மைக் கால ஆய்வொன்று தெரிவிக்கிறது. பெண்களிடம் மதுபாவனை அதிகரிப்பதற்கும், சிறுபராயத்தில் அவர்கள் பாலியல் ரீதியாக துஷ்பிர யோகத்து க்காளா வதற்கும் தொடர்பி ருக்கிறதென பல வகையான ஆய்வுகள் மூலம் தெரிய வருகின்றது.



ஏனைய உள நலச்சிக்கல்க ளுக்குள்ளான பெண்கள், ஆண்க ளினால் அடித்து நொருக்கப்பட்ட பெண்கள் அல்லது குடிப்பழக்கமில்லாத பொதுவான பெண்கள் என்போர் களிலும் பாாக்க, சிறுவயதில் பாலியல் வன்முறையினால் பாதிப்புற்ற பெண்களே மதுப்பழக்கத்திற்கு அதிகமாக அடிமைப பட்டுள்ளார்களென்பதை இவர்களுககு சிகிச்சை அளிக்கும் நிகழ்ச்சித் திட்டம் மூலம் அறிந்துள்ளதாக பல்வகைப் பின்னடைவுகள் பற்றிய ஆய்வை மேற்கொண்டுள்ள பிரபல உளவியல் ஆய்வாளர்களான மில்லர், டவுண்ஸ், ரெஸ்டா ஆகியோர் தெரிவித்திருக்கின்றனர். பெற்றோரின் குடிப்பழக்கப் பிரச்சினைகள் உட்பட குடும்பங்களின் பின்னணியில் காணப்படும் வேறுபாடுகள் மற்றும் பிறப்பு நோய் முதலியவை சமூக நிலைப்புள்ளி விபர ஆய்வு முதலியவற்றால் கட்டுப் படுத்தப் பெற்ற பின்பும் இவ்வாறான முடிவுகள் பெறப்பட்டிருப்பது புறக்கணிக்கக் கூடிய விடய மல்ல.

வாஷிங்டனில் வளரிளம்பருவத்திலான 535 கர்ப்பிணிகளை உதாரணமாக எடுத்து ஆராய்ந்த போது, சிறுவயதில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கும் இளம்பருவக் கர்ப்பத்துக்கும் தொடர்பு இருப்பதை டெப்ரா போயர் மற்றும் டேவிட்.பைன் ஆகிய ஆய்வா ளர்கள் கண்டுள்ளனர். பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகாத இளம் கர்ப்பிணிகளுடன் ஒப்பிடும்போது, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ள்ளான இளம் பராயப் பெண்கள் ஒரு வருடத்திற்கு முன்னரே உடலு றவு கொள்வதில் ஈடுபட்டுவிடுகின்றன ரென்பதும், போதை வஸ்து மது முதலியவற் றைப் பாவிப்பது, கர்ப்பத் தடுப்பு முறை களை பெரும்பாலும் கையாள்வதில்லை யென்பதும் தெரிய வந்துள்ளது. துஷ்பிரயோகத்துக்கு ள்ளான இளம் பெண்கள் பெரும் பாலும் அவர் களின் நெருக்க மான கூட்டாளி களால் பலவந்தப் படுத்தப் பட்டு உடலுறவுக்குள்ளா க்கப் படுகின்றனர், பணத்திற்காக, போதைப் பொருளுக்காக அல்லது தங்குமிட வசதிக்காக அவர்கள் உடலுறவுக்கு ஆளாகின்றனர். துஷ்பிரயோகத்துக்கு ஆளாகிய பெண்கள் சராசரியாக அவர்களின் 13வது வயதிலே உடலுறவுக்குள்ளாகின்றனர். முதற்தடவையாக பாலியல் உடலுறவுக்கு ள்ளாக்கப்படும் இளம் வயதுப் பெண்களில் 28 வீதமானவர்களே கர்ப்பத்தடுப்பு முறைகளைப் பயன்படுத்துகின்றனர்.

## பிறப்புறுப்பைச் சிதைத்தல்

பெண்கள் புணர்ச்சி செய்வதைத் தடுக்கும் பொருட்டு, அவர்களின் பிறப்புறுப்பைச் சிதைப்பது கடுமையான மருத்துவச் சிக்கல்களை ஏற்படுத்த வல்லது. சீராலியோன் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் படி, பிறப்புறுப்பின் நுனி இதழ்ப்குதி அகற்றப்பட் பெண்களில் 85 வீதமான வர்களுக்கு, இது தொடர்பாக கடைப்பிடிக்கப்பட்ட செயன்முறை காரணமாக எழுந்த சிக்கல்களால் சில சமயங்களில்

மருத்துவக் கவனிப்பு அவசிய மாயிருந்தது என அறியப்பட்டது. மகளிரின் கந்தை அல்லது பிறப்புறுப்பின் நுனி இதழை அறுப்பதனால் ஏற்படும் உடனடி ஆபத்துகள் ஒரே மாதிரியானவையே. மகளிர் கந்து நீக்கப்பட்ட பகுதியின் குருதிக் குழாயிலிருந்து இரத்தப்போக்கு, சிறுநீர்த்தேக்கம், நோய்த்தொற்று, ஏற்புவலி ஏற்படுகின்றன. நோய்க்கிருமி அகற்றப்படாத கரடுமுரடான கத்தி, சவர அலகு, உடைந்த கண்ணாடித் துண்டு போன்றவற்றால் உறுப்பு அறுக்கப்படுவதால் குருதி நஞ்சடைகிறது. மயக்க மருந்து பயன்படுத்தப்படாமல் இச் செயல்கள் மேற்கொள்ளப்படுவதால் இளம் பெண்கள் கடுமையான மன அதிர்ச்சிக்கு ள்ளாகின்றனர். உறுப்பு நறுக்கப்பட்ட பெண்களிலும் பார்க்க, புணர்ச்சியைத் தடுப்பதற்கான உறுப்புச் சிதைத்தல் நோய்களுக்குள்ளாக்கப்பட்ட பெண்களே காலப்போக்கில் பொதுவாக கடுமையான உடல்நலமற்ற நிலைமையை எதிர்கொள்கின்றனர். பாலியல் புணர்ச்சியைத் தடுப்பதற்கான உறுப்பு சிதைக்கப்படும் போது அதிகளவு வெட்டுகள், தையல்கள் மேற்கொள்ளப்படுவதால், இரத்தப்போக்கு, நோய்த்தொற்று முதலிய அபாயங்களுக்கு ள்ளாகின்றனர். யோனிக் குழாயின் ஒரு பகுதியை மூடுவதிலும், மூத்திரக் குழாயில் வாயில்களை ஏற்படுத்துவதிலும், மூத்திரம், மாதவிடாய் ஒழுக்கு முதலியவற்றின் வழிகளில் நாட்பட்ட நோ, நோய்த் தொற்று சிறுநீர்ப்பையில் கற்கள், அடிக்கடி முதுகு உழைவு, மாதவிடாய் வலி, ஒழுங்கீனமான மாதவிடாய், அடிக்கடி பிள்ளைப்பேற்றுப் பாதையில் நோய்த் தொற்று ஏற்படுகின்றன. சில பெண்களைப் பொறுத்தளவில் இத்தொற்று நோய்களால் மலட்டுத்தன்மையும் ஏற்பட்டு பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. பிள்ளைப்பேற்று ஆற்றலுள்ளவளாயிருப்பதே பெண் என்பதன் தகுதி என பெரும்பாலும் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

புணர்ச்சி செய்வதைத் தடுக்கும் பொருட்டு பெண்ணின் உறுப்பை தைத்துவிடுவதால் பின்னர் புணர்ச்சிக்கும் பிள்ளைப் பேற்றுக்குமென, உறுப்பை வெட்டி திரும்பவும் தையல் போடுவதால் அவள் மாறி மாறி வலியை அனுபவிக்க வேண்டியிருப்பது தலைவிதியே என்றாகி விட்டது. உறுப்பில் தையல் போடப்பட்ட பெண்கள், அவர்களின் திருமண முதலிரவில் உடலுறவு பூணக்கூடியதாகவும் பின்னர் பிள்ளைப் பெறக்கூடியதாகவும் அடிக்கடி பெண் உறுப்பு வெட்டப்படுகிறது. அவளைப் பொறுத்தவரை உடலுறவு என்பது வலி உணர்ச்சியை ஏற்படுத்துவதாகவும், உடல் உளவியல் அடிப்படையில் நோவை உண்டாக்கும் மூல காரணமாகவும் உணரப்படுகிறது. பெண் உறுப்பைத் தடுப்பதன் காரணமாக பிள்ளைப் பேற்றுக் காலத்தில் தாயும் மகவும் ஆபத்துக்களுக்கு உள்ளாகின்றனர்.

சோமாலியாவிலுள்ள பெனாதீர் மருத்துவமனையில் குழந்தை பெறவந்த பாலுறவு கொள்ள முடியாமல் உறுப்பைத் தடுத்துத் தைக்கப்பட்ட 33 தாய்மார்களில் குழந்தைப்பேற்று நேரத்தில் அவர்களின் உறுப்பைவிரிவாக்கி அகலச் செய்வது அவசியமாயிருந்தது. இயல்பான நிலைமையிலும் பார்க்க இருவயது காலமாக இறுகி கடினமாகிப் போன உறுப்பை சீர்படுத்தி குழந்தையை ஜனிக்கச் செய்வதற்கு ஐந்து மடங்கு நேரமெடுத்தது. அவர்களில் ஐவரின் குழந்தைகள் இறப்புற்றன; பிராணவாயு செலுத்த முடியாமல் 21 பேர் மிகக் கஷ்டமுற்றனர். இவர்களில் குழந்தை பிறந்த பின் பெரும்பாலானவர்களுக்கு யோனிக் குழாயில் சிறிய துவாரமிட்டு மீண்டும் யோனி தைத்து மூடப்பட்டது. காலத்துக்குக் காலம் இவ்வாறு மீளவெட்டுவதும் தைத்து மூடுவதுமான செயல்களால் பாலுறுப்புப்பகுதி இறுக்கமாகித் தடித்துக் கெட்டித்த உட்சிக்கல் கொண்ட இழைமமாகி விடுகிறது.

பெண்ணுறுப்பின் நுனிப்பகுதி அறுக்கப்பட்ட பெண்களுக்கு வழமையாக ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கையான சிக்கல் நிலைமை ஏற்படுகிற போதிலும் அவர்களின் உறுப்பின் கந்துப் பகுதியானது சிக்கல்களையும் இடர்களையும் சூழ்ந்தவையாக உள்ளது. உறுப்பு நறுக்கப்பட்ட பெண்களில் கணிசமான தொகையினர் வாழ்நாள் முழுவதும் தொடரும் தொற்றுநோய்கள், வலி, இரத்தப்பெருக்கு சீழ்க்கட்டிகள் போன்றவற்றிற்கு முகம் கொடுக்கின்றனர். மோசமான உளப்பாதிப்பும் ஏற்படக்கூடிய சாத்தியமும் இவர்களுக்கு உண்டு. பெண்ணுறுப்புக்களைச் சிதைப்பதால் ஏற்படக்கூடிய உளவியல் தாக்கம் பற்றி போதியளவு ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும் மருத்துவப் பயிற்சியாளர்களின் அபிப்பிராயப்படி இவ்வாறானவர்கள் நீண்ட காலத்துக்கு கடுத்துன்பங்களையும் சில சந்தர்ப்பங்களில் உளரீதியான செயற்பாடின்மைக்கும் ஆளாகின்றனர். வைத்தியத்துறையில் டொக்டர் நஹீட் தோபியா, சூடான் நாட்டில் தாம் எதிர்கொண்ட அனுபவங்களைப் பற்றி விபரிக்கையில் உடற்சோர்வு, நோவு, ஊக்கமின்மை போன்ற நோய்களைப் பற்றி தெளிவற்ற வகையில் உறுப்புச் சிதைக்கப் பெற்ற பெண்கள்

அடுக்கடுக்காக துயர்ப்பாடுகளை சொல்லிக் கொண்டிருப்பர். இவ்வகையான நிலைமை அமெரிக்க நாடுகளில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ள்ளான அல்லது வல்லுறவுக்குள்ளான பெண்களை ஒத்ததாகவேயுள்ளது என்கிறார் டொக்டர் நஹீட் தோபியா.

1993ல் டொக்டர் நஹீட் தோபியா தயாரித்த அறிக்கையின் ஒரு பகுதி பின்வருமாறு :

"சூடானில் பெண்களின் நோய் தொடர்பான சிகிச்சை நிலையங்களக்கு வரும் ஆயிரக்கணக்கான பெண்கள் தெளிவற்றதும் நாட்பட்டதுமான நோய் அறிகுறிகளை குண்டிக்காயின் உட்குழிவுப்பகுதியிலிருந்து தொடங்கியதாக உருவகப்படுத்திக் கொள்ளுகின்றனர். சிகிச்சை நிலையத்தில் பணியாற்றும் மருத்துவர்களும் நிர்வாகமும் இப்பெண்களின் தொணதொணப்புத் தொந்தரவுகளினால் சலிப்படைகின்றார்கள். மருத்துவமுறையில் அப்பெண்களிடம் காணக்கூடிய வகையில் எதுவுமில்லாமை யால், சிகிச்சை முறை வீணடிக்கப்படுவதாகக் கருதுகிறார்கள். நீண்ட நேரம் அவர்களுடன் உரையாடும் போது சலிப்பூட்டும் வகையில் அவர்கள் தெளிவற்ற வகையில், நித்திரையின்மை, சோர்வு, முதுகுவலி, குண்டிக்காயின் உட்குழிவுப் பகுதியில் இறுக்கம் போன்ற குணங்குறிகளைப் பற்றி நொந்துப்போன சலிப்பூட்டுங் குரலில் தமக்கு ஏற்பட்டுள்ள தாங்கமுடியாத நோவுக்கு உதவும்படி அவர்கள் கெஞ்சுவது ஊமைத்தனமான கதறல்களாக உள்ளன. இவற்றை சற்று ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் அப்பெண்கள் உடலுறவுக்கு அஞ்சுவதையும், தொற்று நோய்க்கிருமிக்குப் பின்பு, மலட்டுத்தன்மை ஏற்பட்டு விடுமோ எனப் பயப்படுவதையும், தங்களுடைய பிறப்பு உறுப்புக்களின் இருப்பமைதி எப்படியுள்ளதோ என்று அச்சமுறுவதையும், அப்பெண்களின் உரையாடல்களிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. தாங்கள் இயல்பாக இருக்கிறார்களோ என்பதை மதிப்பிடக்கூடிய வழியேதும் அவர்களிடம் இல்லை."

1982ல் உலக சுகாதார ஸ்தாபனம் (WHO), பிறப்புறுப்புக்களைச் சிதைப்பதில் தொழில்சார் மருத்துவப்பணியினர் ஈடுபடக்கூடாதென்ற கடும் எச்சரிக்கையைத் தனது அறிக்கை மூலம் வெளியிட்டது. இவ்வறிக்கையையும் இதேபோன்று பல மருத்துவ அமைப்புக்களாலும், பிரதிநிதிகளாலும் தயாரிக்கப்பட்டு 1991ல் புர்கினா பாசோவில் பாரம்பரியப் பழக்கவழக்கங்கள் தொடர்பாக நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானங்களையும் பொருட்படுத்தாமல் பணம் சம்பாதிப்பதற்காக பிறப்புறுப்பு அறுவைப் பணிகளை, தாதிமார்களும் பாரம்பரிய முறையில் மேற்கொள்பவர்களும் வழமையில் மேற்கொள்ளும் இச்செயலை மருத்துவமனைகளிலேயே மருத்துவப் பணியாளர் பணம் சம்பாதிப்பதற்காக மேற்கொள்ளுகின்றனர் என்கின்றனர். ஆய்வாளர்களான டோர்கினும் சீலாவும். மருத்துவ அடிப்படையில் பிறப்புறுப்பின் நுனித்தோல் இதழை அகற்றுவதனால் உடனடித் தொற்று நோய் அபாயம் குறைவாயிருந்த போதிலும், தேவையற்றதும் பெண்களின் உறுப்பைச் சிதைப்பதுமான அறுவைச் சிகிச்சையானது பெண்களின் உரிமைகள் துஷ்பிரயோகத்துக்குள்ளாவதை முடிவுக்கு கொண்டு வராது.

கெய்ரோ குடும்பத் திட்டமிடல் மன்றத்தின் செயற்திட்டத் தலைவரான அஜைசாகாமில் சுட்டிக்காட்டுவதாவது :

"பெண்ணுறுப்புக்களைச் சிதைப்பது தொடர்பாக, அதனை வைத்தியத் தொழிலடிப்படையில் செய்வதைச் சட்டப்பூர்வமானதாக்குவதைத் தவிர வேறு நடவடிக்கை எதுவும் ஆற்றலுள்ளதாக இருக்க முடியாது. மருத்துவர்களும் , மருத்துவ மனைகளும் இதனைக் கண்டித்துக் கொண்டிருக்காமல், அவர்களே இதனைச் செய்ய ஆரம்பித்தால், இப்பழக்கத்தை ஒழிக்க வேண்டுமென்ற நம்பிக்கை ஒருபோதுமே எழாது. மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து மதிப்புக்களும் அதிகாரங்களும் சட்ட நடைமுறை ஒழுங்குகளுக்கு உள்ளாகிவிடும். இவ் விவகாரம் தொடர்பான செயற்பாட்டாளர்களும் தமது நம்பகத்தன்மையை இழந்து விடுவர்".

## உடல்நலக் கவனிப்பு முறை

பெண்களின் ஆரோக்கியத்தையும் சமுதாயத்தின் ஆரோக்கியத்தையும் வன்முறைகள் பெருமளவில் பாதித்து பற்றாக்குறை நிலையிலுள்ள வளங்களை, பெருமளவில் திசை திருப்பி விடுகின்றன. பரவியுள்ள துஷ்பிரயோகங்களையும் அவற்றினால் ஏறபட்டிருக்கும் உடல் நலத்தன்மைகளையும் கவனத்தில் கொள்ளும் போது தேக ஆரோக்கிய வளங்களில் கணிசமானவை கொடுமைகளுக்குப்

பலியாக்கப்படும் செயல்கள் உறிஞ்சி விடுகின்றன என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. வல்லுறவு அல்லது திடீர்த்தாக்குதல் காரணமாக மருத்துவர்களின் வருகைகள் மற்றும் வெளிநோயாளர்களின் செலவுகள், புகைத்தல் பழக்கத்தால் பெண்ணுக்கு ஏற்படும் ஆரோக்கிய அழிவு உள்ளிட்ட பல்வகையான சிகிச்சைச் செலவுகளிலும் பார்க்க கூடுதலாக இருப்பதை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆரோக்கிய பராமரிப்பு நிறுவனம் (US.HMO) ஆய்வொன்றின் மூலமாகக் கண்டறிந்துள்ளது. பல்வகைப் பின்னடைவுகள் பற்றிய இந்தப் பகுப்பாய்வில் ஐந்து பல்வகை பிறப்பு நோய்கள் பற்றிய சமூகநிலைப் புள்ளிவிபரம், நான்கு வழியிலான சுகாதார நிலைமைகள், ஐந்து வகையான வாழ்க்கை முழுவதும் அனுபவிக்கு மனநெருக்கடிகள் என்பவை பரிசீலனைக்குட்பட்டு பின்வருவன கண்டறியப் பெற்றன.


* வல்லுறவுக்குள்ளான அல்லது தாக்கத்துக்கு உள்ளான பெண்களின் மருத்துவச் செலவுகள், பாதிப்புக்காளாகாத பெண்களின் செலவுகளிலும் பார்க்க குறிப்பிட்ட ஆண்டில் இரண்டரை மடங்கு கூடுதலாகும். (அதாவது முறையே 401 டொலர்கள், 161 டொலர்கள்).

* பாதிக்கப்பட்ட இழிந்த நிலையில் இருக்கும் பெண்களை அடிப்படையாக கொண்டு நடத்தப் பெற்ற காலஞ் சார்ந்த பகுப்பாய்வின்படி அவர்கள் பாதிப்புக்குள்ளாகி இரு ஆண்டுகளின் பின்பே உடல்நலக் கவனிப்புச் சேவைகள் மிகக்கூடுதலாக அதிகரித்தது. சம்பவம் நடந்து நான்கு ஆண்டுகளின் பின்பும் அவ்வதிகரிப்பு வழமையான அடித்தள நிலைக்கு வரவில்லை.

* தாக்கப்பட்ட அல்லது வல்லுறவு புரியப்பட்ட பெண்கள் தாங்கள் ஆரோக்கியம் குன்றியவர்களாக இருப்பதாகவும் கண்களையும், தோலையும் தவிர நடைமுறையில் அவர்களின் உடம்பெங்கும் நோய் அறிகுறிகள் காணப்படுவதாகவம் விபரிக்கின்றனர். அவர்களிடம் ஆரோக்கியத்திற்கும் கேடுவிளைவிக்கும் புகைத்தல் போன்ற நடத்தைகள் கூடிய வீதமாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆரோக்கியப் பராமரிப்பு மன்றத்தின் திட்டத்தில் பதிவு செய்யப் பெற்றுள்ள பெண்கள் மத்தியில் ''பெலிற்றி'' என்ற ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட இதுபோன்ற ஆய்வில் சிறுவயதில் பாலியல் தொந்தரவுக்கு அல்லது வல்லுறவுக்குள்ளான 22 சதவீதத்தினர் ஆண்டொன்றுக்கு 10 தடவைகளுக்கும் அதிகமாக மருத்துவரிடம் சென்றிருக்கின்றனர். இவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது சிறுவயதில் பாதிப்புக்கு ள்ளாகாத பெண்கள் ஆக 6 தடவைகளிலேயே மருத்துவரிடம் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உடல் நலக்கவனிப்புக்கான பாவனைகள் தொடர்பாக லொஸ் ஏஞ்சல் நகரில் பொதுமக்களிடம் அங்குமிங்குமாக திரட்டப் பெற்ற புள்ளி விபரச் சேகரிப்பின் போது விடையிறுத்தவர்கள், பாலியல் தாக்குதலுக்குள்ளான பின்னணியைக் கொண்டவர்கள் ஏனையவர்களிலும் பார்க்க இருமடங்கு தடவைகள் உளநலக் கவனிப்பைப் பெற்றிருக்கலாமெனவும் பாலியல் தாக்கத்துக்குள்ளாகாதவர்களிலும் பார்க்க பாலியல் ரீதியில் தாக்கமுற்றவர்கள் கடந்த 6 மாத காலத்தில் மும்மடங்கு தடவைகள் மருத்துவர்களிடம் சென்றிருக்கக் கூடுமெனவும் தெரிவித்தனர். பால்வேறுபாடு, இனவேறுபாடு, வயது வேறுபாடு பேன்ற வித்தியாசங்கள் கட்டுப்படுத்தப் பெற்றுள்ள போதிலும் இவ்வாறான செயல்கள் விடாப்பிடியாக நிலவுகின்றன. இவ்வாய்வின் பல்வகைப்பட்ட பகுப்பாய்வுகள் - தாக்கங்களுக்குப்பின்பு உளவியல் ரீதியாக நோய் நிலை வீதம் அதிகரிப்பதற்கும், இயங்குதிறன் குறைவடைவதற்கும் மறைமுக காரணமா யுள்ளதென கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆய்வின்படி சுகாதார சேவைகளைப் பயன்படுத்தாதவர்களிலும் பார்க்க அவைகளைப் பயன்படுத்துபவர்கள் மத்தியிலேயே பாலியல் தாக்குதல்கள் கணிசமான அளவு அதிகமாக நிலவுவதாகவும் அறியப்படுகின்றது. இவை முக்கியமாக உணர்த்துவதென்னவெனில் சுகாதாரக்கவனிப்பு வசதிகளைப் பயன்படுத்தி வன்முறைப் பாதிப்புக்குள்ளான பெண்களை இனங்கண்டு அவர்களுடன் தொடர்பு கொண்டு பொருத்தமான ஆதரவுகளையும் உதவிகளையும் வழங்க வேண்டுமென இந்த ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

(லோறி எல். ஹெயிஸ் அவர்களுடன் இணைந்து ஜக்குலின் பிறாங்கக் அட்றின் ஜெர்மானி என்போர் தயாரித்த "பெண்களுக்கெதிரான வன்முறை" என்னும் நூலில் இருந்து....)



## பெண்கள் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள்

- ❑ பண்பாடு மற்றும் நல்லமுறையான வளர்ப்புக் காரணமாக எமது சமூகத்திலுள்ள பெண்கள் குடும்பப் பிரச்சினைகளை மற்றவர்களிடம் சொல்வதற்கு வெட்கப்படுகின்றனர்.

- ❑ அவர்களின் அறியாமை காரணமாக அவர்களுக்கு இருக்கக்கூடிய உரிமைகளையும் சட்டமூலமாகச் சீராக்கக்கூடிய வழிமுறைகளையும் பெண்கள் அறிந்திருக்கவில்லை.

- ❑ பெற்றோரைத் தவிர, வேறு எவரும் பெண்களுக்குத் தங்குமிட வசதி அளிக்கவிரும்பாமையால், பெரும்பாலான பெண்களுக்கு வேறு இடங்களுக்குச் செல்லும் வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை.

- ❑ அவர்களின் கணவர்மார் மற்றும் அவர்களின் உறவினர்களின் பழிவாங்கும் செயல்களுக்கு அஞ்சியே மற்றவர்கள் பெண்களுக்கு தங்குமிடவசதி கொடுப்பதில்லை.

- ❑ ஆணாதிக்க சமூகத்தில், கணவன்மாரால் பொலிஸ் மற்றும் அமைப்புக்களில் செல்வாக்கைச் செலுத்தி, தம்மை ஆதரவற்றவர்களாக்கி விட முடியும் என்பதை பெண்கள் அறிந்துள்ளனர்.

- ❑ குடும்பச்சண்டை தொடர்பாக பொலிஸார் அதிக அக்கறை காண்பிப்பதில்லை.

- ❑ இவ்வகை முறைப்பாடுகள் சிவில் தொடர்பான பிணக்குகள் என வகைப்படுத்தப்படுவதால், எவரும் இவற்றைக் கவனிப்பதில்லை. எனவே மக்களுக்கு இதில் நம்பிக்கையில்லை.

- ❑ பெரும்பாலான குடும்பப்பிணக்குகள் வறிய குடும்பங்களிலேயே ஏற்படுவதனால், இக்குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் வன்முறைகளின் மத்தியிலேயே வாழ்கின்றனர்.

- ❑ சட்டங்கள் மூலமான தீர்வுக்கு அதிக காலம் எடுப்பதனால், பெண்கள் சட்டத்தின் துணையை நாட முன்வருவதில்லை.

*– சிரேட்ட பொலிஸ் கண்காணிப்பாளர்*
*திரு. ரீ. வணிகரத்ன.*

## சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக பொலிஸ் சேகரித்துள்ள புள்ளிவிபரம் (1995–2000 காலத்துக்கானவை)

| குற்றங்களின் வகை | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 |
|---|---|---|---|---|---|---|
| வலோற்காரமான பாலியல் நிர்ப்பந்தம் | 247 | 204 | 110<br>193 | 154<br>259 | 101<br>219 | 329 |
| பாலியல் வல்லுறவு | 155 | 168 | 208<br>308 | 271<br>385 | 554<br>609 | 688 |
| கொடூரமான பாலியல் துஷ்பிரயோகிப்பு | - | - | 43 | 22 | 13 | 50 |
| பாலியல் துஷ்பிரயோகம் | - | - | 90 | 137 | 322 | 359 |
| இயற்கைக்கு முரணான குற்றங்கள் | 38 | 54 | 31<br>7 | 51<br>18 | 154<br>47 | 74 |
| மரியாதையற்ற இழி செயல்கள் | 31 | 49 | 20 | 2 | 23 | - |
| தகாப்புணர்ச்சி | 9 | - | 11<br>9 | 2<br>23 | 15<br>38 | 22 |

இப்புள்ளி விபரங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்வோர் சில செய்திக் கூறுகளை மனதில் கொள்ள வேண்டும்.

I. குறிப்பிட்ட குற்றங்கள் தொடர்பான இப்புள்ளி விபரங்கள் அவற்றிற்கான ஆண்டுக்குரியவை எனச் சரியாகக் கொள்ள முடியாது. 2000, 2001 ஆண்டுகளில் காட்டப்பட்டுள்ளவை அதற்கு முந்திய புள்ளி விபரங்களில் கொடுக்கப்பட்டவைகளிலிருந்து மாறுபட்டுள்ளன.

II. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 1995ன் இறுதியில் ஆக்கப்பட்ட புதிய சட்டங்கள் 1996 ஆண்டளவிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டன.

III. பாலியல் செயல் தொடர்பான அதே சட்டம், மூன்று வகைக் குற்றங்களில் ஏதாவது ஒன்றின் கீழ் பதிவாகியுள்ளது. இயற்கைக்கு முரணான பாலியல் குற்றங்கள், மரியாதைக் குறைவான இழிசெயல்கள் - பொலிஸ் அதிகாரியின் கருத்துப்படி, எவ்வகைக் குற்றம் எனத் தீர்மானிக்கப்படுகின்றது.

IV. ஒரே பார்வையில் கடந்த காலங்களின் வல்லுறவுக் குற்றங்களின் அபாயகரமான அதிகரிப்பை ஒருவர் அவதானிக்க முடியும். சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக கடந்த 3 வருடங்களில் 3 மாகாணங்களிலுள்ள உயர்நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை பின்வருமாறு.

| | 1999 | 2000 | 2001 |
|---|---|---|---|
| அனுராதபுர உயர் நீதிமன்றம் | - | 79 | 128 |
| குருணாகல் | 12 | 47 | 51 |
| பதுளை | 8 | 11 | 47 |

# பாலியல் பாதிப்புக்கான அப்பாவிச் சிறுமிகள்

சிறுவயதில் தவறான வழியில் கெடுக்கப்பட்ட சிறுமிகள், பின்னர் மீண்டும் மீண்டும் பலரால் பாலியல் ரீதியில் கெடுக்கப்படக்கூடிய நிலையை எதிர்நோக்குகின்றனர். பல வழக்குகளை விசாரிக்கும் போது, சிறுவயதில் ஆரம்பத்தில் ஒருவரால் தகாத முறையில் குற்றம் புரியப்பட்ட சிறுமி ஒருத்தி, மீண்டும் பல சந்தர்ப்பங்களில் வெவ்வேறு ஆண்களால் காமப் பசித் தீர்க்கப் பயன்படுத்தப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. பின்வரும் வழக்கு அதற்கு உதாரணம் : ஓய்வு பெற்ற 61 வயது அரச பணியாளர் ஒருவர் பள்ளிக்கூடம் சென்று கொண்டிருந்த தனது 13 வயது வளர்ப்பு மகள் மீது வல்லுறவு புரிந்துள்ளார். 1985இல் அத்தம்பதியர் இச் சிறுமியை தமது வளர்ப்பு மகளாக ஏற்றிருந்தனர். 1994ல் இத் தம்பதியர் தமது வளர்ப்பு மகளுடன் பாணந்துறையில் வசித்தனர். அக்காலத்தில் இச்சிறுமி ஒரு வயோதிபரினால் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகிக்கப்பட்டாள். அச்சிறுமி இதனை பெற்றோரிடம் கூறியதால், அவர்கள் பொலிசில் முறைப்பாடு செய்தனர். சிறுமியைக் கெடுத்தவர் மீது தொடுக்கப் பெற்ற வழக்கு இன்னும் பாணந்துறை நீதிமன்றில் விசாரணைக்காகக் காத்திருக்கிறது.

ஏற்கனவே வளர்ப்பு மகளை துஷ்பிரயோகஞ் செய்து குற்றம் புரிந்த ஓய்வு பெற்ற அரச ஊழியரின் மனைவி ஒரு தட்டெழுத்தாளரென்பதால் 1988ல் பதுளை மாவட்டத்திற்கு இடமாற்றலாகி வெளிமடையில் அவர்கள் வசித்து வந்தனர். தினமும் பாடசாலை சென்று விட்டு தமது வளர்ப்பு மகள், பகலில் வீடு திரும்பிய பின் ஒவ்வொரு நாளும், தமது மனைவி வேலையிலிருந்து திரும்புவதற்கு முன், இந்நபர் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகஞ் செய்வது வழக்கமாகியது. கர்ப்பம் ஏற்படாமலிருக்க கர்ப்பத்தடை குளிசைகளையும் அவர் கொடுத்து வந்தார்.


அவர்களின் அயல்வீட்டில் ஓய்வு பெற்ற பொலிசார் சார்ஜன்ற் வசித்து வந்தார். இச்சிறுமி அந்த வீட்டுக்குச் செல்வது வழக்கம். வளர்ப்புத் தந்தை புரியும் திருவிளையாடல்களை சிறுமி பொலிஸ் சார்ஜன்டின் மனைவியிடம் கூறினாள். இவ்விஷயத்தைத் தெரிந்து கொண்ட சார்ஜன்ட், தானும் அவள் மீது பாலியல் குற்றம் புரியத் தொடங்கி விட்டார்! அந்த சார்ஜன்டுக்கு ஒரு மகனும் இருந்தான். தந்தை வழியில் மகனும் அவளைச் சுவைக்கத் தொடங்கிவிட்டான். அச் சிறுமியின் வீட்டில் இன்னும் ஒருவர் வாடகைக்குத் தங்கியிருந்தார். அவளைத் தமது அறைக்குள் கூட்டிச் சென்று...... மேலும் சார்ஜன்ட் வீட்டிற்கு நண்பரொருவர் வருவதுண்டு. அவரும் அவளை பாலியல் சேட்டைகளுக்குப் பயன்படுத்தினார். அச்சிறுமி இவற்றை தனது வளர்ப்புத் தாயிடம் கூறியபோது, ''வெளியே போ சனியனே'' என விரட்டினாள்.

சிறுமிக்குப் போக்கிடமெதுவுமில்லை. இப்பிரச்சினைகளால், அவள் சாப்பிடுவதைப் புறக்கணித்தாள். சாப்பிட மறுத்ததால் தாய் நெருப்பினால் சுட்டாள். சிறுமி பாடசாலையில் இவற்றைத் தனது ஆசிரியையிடம் கூறிய போது, அவர் விஷயத்தைப் பொலிசுக்கு அறிவித்தார்.

26-03-1998 அன்று பொலிசார் அச்சிறுமியின் முறைப்பாட்டைப் பதிவு செய்த போது, தனக்கேற்பட்ட சோதனைகளை அவள் விபரித்தாள். பொலிசார் சகல சம்பவங்களையும் விசாரணை செய்து அவள் மீது குற்றம் புரிந்த அனைவரையும் கைது செய்திருக்க வேண்டும். ஆனால் அவளின் வளர்ப்புத்தந்தையை மட்டுமே கைது செய்தனர்; ஏனைய குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை.

14-01-2001 அன்று மனித உரிமைகள் அமைப்பின் சட்டப்பிரிவுக்கு பதுளையில் உள்ள ஊவா மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறார் பாதுகாப்புச் சேவைகள் ஆணையாளரிடமிருந்து கிடைத்த கடிதத்தில் மூன்று வருடங்களுக்கு முன் பண்டாரவளையிலுள்ள சுஜாதா சிறுவர்கள் பாதுகாப்பு நிலையத்தில் நீதிமன்ற உத்தரவுப்படி சிறுமி ஒருத்தி சேர்க்கப்பட்டிருப்பது தெரியவந்தது. இக்கடிதம் வந்ததும் மனித உரிமைகள் அமைப்பின் சட்டப்பிரிவு, வெளிமடைப் பொலிஸ் நிலையத்தை தொடர்பு கொண்டு இவ்வழக்குத் தொடர்பான விஷயங்களை அறிந்து கொண்டது. மேலும் வெளிமடைப் பொலிசார் சிறுமியின் முந்திய முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்ட மேலும் இருவரைக் கைது செய்திருப்பதாயும், மற்றொருவரையும் கைது செய்யவுள்ளதாகவும் அறிவித்திருந்தனர். குற்றவாளிகள் மீது வழக்குப் பதிவு செய்வதற்காக அட்டர்ணி ஜெனரலின் ஆலோசனைக்காகக் காத்திருப்பதாயும் தெரிவித்திருந்தனர்.

இவ்விரு வழக்குகளிலும் இச்சிறுமி பாணந்துறை மற்றும் பதுளை உயர்நீதிமன்றங்களில் சாட்சியமளிக்க



வுள்ளார். அட்டர்ணி ஜெனரல் அச்சிறுமியை பாலியல் சேட்டைகளுக்குட்படுத்திய ஏனைய குற்றவாளிகள் மீதும் வழக்குத் தொடரலாமென ஆலோசனை வழங்கினால், அவள் இரண்டு மூன்று உயர்நீதிமன்ற விசாரணைகளில் சாட்சியமளிக்க வேண்டும். முதன்முறையாக அவள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகிய போது அவளுக்கு வயது 9. அடுத்த தடவை ஐந்து பேர்களினால் கெடுக்கப்பட்ட போது அவளுக்கு 13வயது. இப்பொழுது அவள் 18 வயது இளம் பெண். வழக்குகள் ஒவ்வொன்றினதும் நீண்ட குறுக்கு விசாரணைகளின் போது, நீதிமன்ற நடைமுறைகளினால் இப்பெண்ணுக்கு ஏற்படவுள்ள மன அதிர்ச்சியை எவராவது கற்பனை செய்ய இயலுமா?

## II

பின்வரும் இரு வழக்குகளில் ஒரே நபர் முறையே 8, 9 வயதுடைய இரு சிறுமிகள் மீது கொடூரமான வகையில் பாலியல் துஷ்பிரயோகஞ் செய்தாரென குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

1996ல் இச்சிறுமிகளின் தந்தை குடும்பத்திலுள்ள 4 பிள்ளைகளையும் கைவிட்டு விட்டு தனது மைத்துனனின் மனைவியுடன் ஓடிப்போய்விட்டான். மூத்த பெண்ணுக்கு 16 வயது. அவள் திருமணம் முடித்து வேறிடத்தில் வாழ்கிறாள். அடுத்த 3 பிள்ளைகளில் இருவர் பெண்கள்; வயது முறையே 9, 8, கடைக்குட்டி 4 வயதுப் பையன். குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக தாய் ஒரு பண்ணையில் கூலி வேலை பார்ப்பவள்; வேலைக்கென காலையில் சென்று இருட்டிய பின்பே திரும்புவாள். கிராமப் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த இரு பெண்பிள்ளைகளும், ஒன்று விட்டு ஒரு நாள் ஆளுக்கொருவராக வீட்டில் நின்று சிறுவனைப் பார்த்துக் கொள்வர்.

அக்கிராமத்திலுள்ள மூன்று ஆண்களுடன் அவர்களின் தாய்க்கு கள்ளத் தொடர்பிருந்தது. இரவில் அந்த ஆண்கள் அவளின் வீட்டுக்கு வந்து போவது வழக்கம். அவர்களில் ஒருவன் முன்னிரவில் வந்து மறுநாள் காலையிலேயே திரும்பிச் செல்வான். அப்படித் தங்கிச் செல்பவன் ஒரு நாள் 9 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கிவிட்டான். அதனை சிறுமி தாயாரிடம் கூறிய போது அவள் அதனை நம்ப மறுத்து பொய் கூறுவதாக மகளை ஏசினாள். தாயும் அவனுமாகச் சேர்ந்து சிறுமிகள் இருவரையும் அநாதை இல்லமொன்றில் சேர்த்து விடத் திட்டமிடுவதை அச்சிறுமி அறிந்து கொண்டாள். அதன் பின்பு மற்றிரு ஆண்களும் அச்சிறுமியை பல தடவைகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினர். இதனை அவள் தாயாரிடம் கூறவில்லை. முன்னர் கூறியதால் ஏச்சு வாங்கிய அனுபவம் தாயிடம் கூறத்தடுத்தது.

மார்ச் 2000ல் தனது மகனுக்கு ஏற்பட்ட சுகவீனத்துக்கு சிகிச்சை பெறுவதற்காக அத்தாய் சிலநாட்கள் பொலனறுவை மருத்துவமனையில் தங்கியிருந்த போது, அவளின் வீட்டுக்கு வந்து போகும் ஆண்களில் ஒருவன் அவளின் இளைய மகளையும் (வயது 8) பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கி விட்டான். மருத்துவமனை யிலிருந்து தாய் திரும்பியதும், அச்சிறுமி இதனைத் தாயிடம் தெரிவித்தாள். அறலகன்வில போலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது. அவர்களில் ஒருவன் அக்கிராமத்தின் மரணாதாரச் சங்கத்தின் தலைவராக இருந்ததால் செல்வாக்கு மிக்கவனாக விளங்கினான். தாய் பொலிசுக்கு அளித்த வாக்குமூலத்தில், அவனை விடுவிப்பதற்காக, அவன் எவ்வித குற்றத்தையும் புரிந்ததாக மகள் தன்னிடம் கூறவில்லையெனத் தெரிவித்தாள். இருமகள்மார் மீதும் கொடிய பாலியல் குற்றம் புரிந்த ஒருவன் மீது மட்டுமே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. மூத்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய மற்றிருவர் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

**- L. H. R. D. Research Study.**

# வல்லுறவும் சட்டமும்

''16 வயதுக்கு உட்பட்ட ஒருவருடன், அவரின் சம்மதத்துடனோசம்மதமில்லாமலோ பாலியல் உடலுறவு கொள்வது பாலியல் வல்லுறவே'' எனச் சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ளது. இதற்குப் புற விதிவிலக்காக அவள், அவனின் மனைவியாகவும், 12 வயதுக்கு மேற்பட்டவளாகவும், சட்ட பூர்வமாக அவனிடமிருந்து பிரிந்து வாழ்பவளாகவும் இல்லையெனில் சட்டப்படி அவர்களின் உடலுறவுச் சம்பவங்கள் வல்லுறவாகக் கருதப்படமாட்டாது. பெண்ணின் சம்மதம் உண்மையானதாக இருக்க வேண்டும். வற்புறுத்தல் அல்லது போதைவஸ்து மயக்கம், அல்லது புத்திசுவாதீனம் என்னும் காரணங்களினால் குறிப்பிட்ட பெண் சம்மதம் அளித்திருந்தால் அவளின் சம்மதம் உண்மையாகப் பெறப்பட்டதல்ல. ஒரு பெண் சம்பந்தப்பட்டவனைத் தனது கணவன் என்ற நம்பிக்கையில், ஆனால் அவனோ அவளின் கணவன் என்பது உண்மையல்ல என்பதை அறிந்திருந்த போதிலும் அதனைக் கூறாமல் மறைத்து அவளின் சம்மதத்துடன் அவளுடன் உடலுறவு புரிவது பாலியல் வல்லுறவே. திருமண வல்லுறவுவென்பது ஒரு கணவன் தனது மனைவி மீது வல்லுறவு கொள்வதாகும். எமது நாட்டுச் சட்டங்களின் படி திருமண வல்லுறவென்பது ஒரு பெண் சட்டபூர்வமாக தனது கணவனிடமிருந்து பிரிந்திருக்கும் காலத்தில் கொள்ளப்படும் உடலுறவு பாலியல் வல்லுறவாகும். எனவே கணவனும் மனைவியும் ஒன்றாக இணைந்து வாழ்கின்ற அல்லது நீதிமன்ற உத்தரவின்றி பிரிந்திருக்கும் காலத்தில் உடலுறவு மேற்கொள்வது குற்றமிழைக்கப் படுவதாகாது.

### பாலியல் துஷ்பிரயோகத்தால் ஏற்படும் பேரிடர்கள்

பாலியல் வல்லுறவுக்கும் இடரேற்படுத்தும் பாலியல் துஷ்பிரயோக த்துக்குமிடையில் வேறுபாடுகள் இருப்பதை இலங்கைச் சட்டம் விளக்குகின்றது. பெண்ணின் பிறப்புறுப்பில் சேட்டை புரிவது அல்லது பாலியல் மகிழ்ச்சிக்காக அதில் அல்லது பாதிக்கப்படுபவளின் உடம்பின் வேறு பகுதியொன்றில் ஆயுதமொன்றினால் துழைத்து துவாரமிடுவது போன்ற செயல்கள் பேராபத்தான பாலியல் துஷ்பிரயோகமெனபதில் அடங்கும். பாலியல் வல்லுறவுக்கும் பேரிடர் உண்டாக்கும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் குறைந்தது ஏழாண்டுச் சிறைவாசம் என ஒரே வகையான தண்டனை அளிக்கப்படும். கூட்டுக்குழுவாக பாலியல் வல்லுறவு புரிதல், பாதுகாப்பில்லாப் பெண்ணை வல்லுறவு புரிதல், கர்ப்பிணியைப் அல்லது உடல் ஊனமான பெண்ணை வல்லுறவு புரிதல் என்பவை சட்டப்படி மிக மோசமான குற்றங்களெனக் கருதப்படுபவை. இவ்வகைக் குற்றம் புரிபவர்களுக்கு சட்டம் குறைந்தது 10 ஆண்டுச் சிறைத்தண்டனை அளிப்பதுடன், பாதிப்புக்கு உள்ளான பெண்ணுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்ட வேண்டுமெனத் தெரிவித்துள்ளது. பாதுகாப்பிலுள்ள பெண்ணை வல்லுறவுக்கு ள்ளாக்கல் என்பது, அதிகாரத்திலுள்ள ஒருவர் தனது பதவி அதிகாரத்தைப் பயன்படுத்தி தனது பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையிலுள்ள பெண் மீது வல்லுறவை மேற்கொள்வதாகும். உதாரணமாக ஒரு பொலிஸ் அதிகாரி, தனது பாதுகாப்புப் பொறுப்பில் வைக்கப் பெற்றுள்ள பெண் மீது பாலியல் குற்றம் புரிந்தால் அவர் பாதுகாப்பிலுள்ளவரை வல்லுறவு புரிந்த குற்றத்திற்கு ஆளாகின்றார். அதே மாதிரி, மருத்துவமனை அதிகாரியொருவரோ, சிறுவர் மற்றும் மகளிர் காப்பக பொறுப்பாளர் ஒருவரோ, விசாரணைக்காகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள இல்லத்தின் அதிகாரியோ, அவரின் பாதுகாப்பிலுள்ள பெண் மீது வல்லுறவு மேற்கொண்டால், அவர் பாலியல் வல்லுறவு புரிந்த குற்றத்திற்கு ஆளாக்கப்படுவார். இந்தியாவில் பாதுகாவலில் உள்ளவர் மீது குற்றம் புரிந்த சந்தர்ப்ப சாட்சியங்கள் நிருபிக்கும் பொறுப்பு எதிர்மறையாகியுள்ளது. பாதுகாப்பிலுள்ள பெண்ணுடன் உடலுறவு மேற்கொள்ளப் படுமிடத்து அச்செயல் வல்லுறவு என அறியாமல் எடுக்கப்பட்ட செய்தி என்றும் இம்முடிவை நீக்கி வல்லுறவு நடக்கவில்லை என்பதை நிருபிக்கும் பொறுப்பு எதிராளிக்குரியதெனவும் கருதப்படுகிறது.

*(சீடாவின் அனுசரணையுடன் சக்தி பால்நிலைச் சமத்துவத்துக்கான நிகழ்ச்சித் திட்டத்துக்காக கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் சியாமளா கோமஸ் அவர்களால் இது தயாரிக்கப்பட்டது).*

சிறுகதை

# நச்சுப் புழுக்கள்

- பத்மா சோமகாந்தன்

அந்தக் கிராமத்தின் குன்றும் குழியுமான மக்கி வீதியில் புதிதாக முளைத்துள்ள இராணுவச் சோதனைச் சாவடியை நெருங்கியதும் மலர்விழியின் மனதில் அச்சமும் வெறுப்பும் ஏற்பட்டன. சோதனை என்ற பெயரில் அங்கங்களைத் தொட்டுத் தடவி.... கைப்பையைக் குடைந்து பார்த்து.... அப்பாவிகளின் மனதைப் புண்பட வைக்கும் இச்செயல்கள், போர் ஓய்வுக்காலத்திலும் எமக்குத் தேவை தானா, என அவளின் மனம் கொதித்தது.

தமது இருப்புக்கு பாதுகாப்பு வேண்டுமென்பதற்காக நிழல் பரப்பி நின்ற மரங்களை இடுப்பளவு உயரத்தில் தறித்து, வெட்டிய கிளைகளை வீதியின் இருபக்க ஓரங்களிலும், வீசி எறிந்திருந்தார்கள்.

உச்சி வெயில் நெருப்பாகத் தகித்தது. அதன் கொடுமையைத் தடுக்க பொலியெஸ்டர் போர்த்த சிறிய குடையினால் முடியவில்லை. உடலெங்கும் வேர்வை கசிந்தது. ஆனாலும் அவளின் கழுத்தையும் மார்பகப் பகுதியையும் வெறித்துப் பார்க்கும் சிப்பாயின் கண்களிலிருந்து அவற்றை ஓரளவாவது மறைப்பதற்காக தாவணிச் சேலையால் கழுத்தை மறைத்து, மார்புப் பகுதியை மறைக்கும் வகையில் கைப்பையைத் தொங்கப் போட்டுக் கொண்டாள்- பாடசாலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த ஆசிரியை மலர்விழி.

அவள் பயணித்த பஸ்ஸிலிருந்து பிரதான வீதித் தரிப்பிடத்தில் இறங்கிய இன்னும் சிலர் கூடவே வந்ததால் அச்சோதனைச் சாவடியில் ''சேட்டை'' எதுவும் புரியாமல் கடந்து செல்ல விட்டனர்.

வீதியின் இருபக்க ஓரங்களிலும் தலையை நிமிர்த்தி கிளைகளால் பசுமை போர்த்த நின்ற வேம்பு, பூவரசு, கிழுவை மரங்கள் மொட்டையடித்துக் கொண்டு நின்றன. சில கிழுவை மரங்களைக் கொழு கொம்பாகப் பற்றிப் படர்ந்திருந்த மல்லிகைக் கொடிகளும் கிழுவைக் கொப்புக்களுடன் சேர்ந்து வெட்டி வீசப்பட்டிருந்தன. மல்லிகைப் பூக்களும் மலர வேண்டிய கன்னி மொட்டுக்களும் வெயில் கருகிக் காய்ந்து கொண்டிருந்த காட்சி அவளின் மனதுக்கு வேதனையாக இருந்தது. வீட்டை நோக்கிய அவளின் நடை சுமையாகக் கனத்தது.

◆

இராணுவச் சாவடி தோன்றுவதற்கு முன்பு, மாலை வேளைகளில் அவளின் தாய் ஒவ்வொரு நாளும் தவறாமல் வந்து விரியும் நிலையில் குப்பென நறுமணம் வீசிக்கொண்டிருக்கும் இந்த மல்லிகை மலர்களை பக்திசிரத்தையோடு பறித்து, மாலையாகக் கட்டி கோவிலுக்குக் கொடுத்து சுவாமிக்குச் சாத்துவித்து மூலவரிடம் குறைகளைத் தீர்க்குமாறு வேண்டிக் கொள்வது வழக்கம். எஞ்சிய பூக்களால் சரம் தொடுத்து தன் செல்லப் பேத்தியின் தலையில் சூட்டி மகிழுவாள். இனி அது முடியாது. எல்லாமே அழிக்கப்பட்டு விட்டன.

அம்மாவுக்கு கடவுள் நம்பிக்கையும் ஆன்ம வைராக்கியமும் அதிகம். மலர்விழிக்கு அப்பாவின் முகம் ஞாபகத்திலில்லை. அவள் சிறுமியாயிருக்கும் போதே இதய நோய்க்குப் பலியாகி விட்டார். அவர் பார்த்த அரச உத்தியோகத்திலிருந்து கிடைக்கும் சிறிய ஓய்வூதியத் தொகையையும் தோட்டக்காணி வருமானத்தையும் வைத்துச் சமாளித்து தனது ஒரே சொத்தான மலர்விழியை வளர்த்து படிக்க வைத்து, ஆசிரிய கலாசாலைப் பயிற்சியை அவள் முடிக்கும்வரை தன்னந்தனியாக எவ்வளவு பாடுபட்டு விட்டாள் அம்மா? அவளுக்கு ஆசிரியர் நியமனம் அயலிலுள்ள நகரப் பாடசாலை ஒன்றில் கிடைத்ததை அறிந்த போது அம்மா அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. அன்றைய நாள் முழுவதும் அவள் தேடித்தேடி அந்த மரங்களில் சேகரித்த மல்லிகை மலர்களால் தொடுத்த நீண்ட பூமாலையைச் சூடிக்கொண்டு கம்பீரமாக இருந்த கோயில்


மூலமூர்த்தியான விநாயகரின் முன்னால் நிவேதனத்துக்காக மோதகங்கள் குவிந்திருந்தன.

``பிள்ளையாரப்பா என்னைக் கடுமையாகச் சோதிக்காமல் எல்லாச் சோதனைகளையும் நிறைவேற்றி வைத்த கருணைத் தெய்வம் நீயே" எனத் தழு தழுத்த குரலில் வணங்கி நேர்த்தியை நிறைவேற்றி நின்ற போது, அம்மாவின் முகத்தில் பொங்கிய பரவசப் பூரிப்பை இன்னும் மலர்விழியால் மறக்க முடியவில்லை.

``பிள்ளை எனக்கு வயசாகிப் போச்சு. நீ வளர்ந்து ஒரு நிலைமைக்கு வந்திட்டாய். படிப்பு முடியட்டும் என்று காத்துக் கொண்டிருந்தனான். உனக்குச் செய்ய வேண்டிய இன்னொரு கடமையும் எனக்கிருக்கு. அது முடிந்தால் தான் எனக்கு நிம்மதி" - மலர்விழிக்கு மாப்பிள்ளை தேடும் படலத்தில் இறங்கிய அம்மா, வெளிநாட்டு மாப்பிள்ளைகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு, அயற்கிராமத்தைச் சேர்ந்த சுந்தரேசனே பொருத்தமானவன் எனக் கண்டு பிடித்து கட்டச் செய்து விட்டாள். அம்மா காரியக்காரி. சுந்தரேசனின் பெற்றோர் நல்ல சனங்கள். சீதனம், சீர்வரிசை என்று எதையும் வற்புறுத்தவில்லை. பட்டப்படிப்பை முடித்து விட்டு நிரந்தரத் தொழிலுக்காக காத்திருந்து கொண்டு ரியூஷன் நிலையம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்த சுந்தரேசனிடம் கெட்ட பழக்கம் எதுவுமில்லை. மலர்விழிக்கும் அவனைப் பிடித்து விட்டது.

அம்மாவின் அருட்தெய்வமான அவ்வூர்ப் பிள்ளையார் கோவிலில் திருமணத்துக்குப் பிறகு அபிஷேக குளிர்த்தியும் மோதக பூஜையும் இன்னுமொரு முறை நடந்தது.

அவர்களின் குழந்தை தாமரை பிறந்து தவழவும் தொடங்கி விட்டாள். இன்னும் அவனால் தொழிலுக்காகப் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. ரியூஷனுக்கு வரும் மாணவர்களும் கொந்தளிப்பான அரசியல் சூழ்நிலை உருவாகியதால் படிப்படியாக குறைந்து விட்டனர். முன்னர் அவளின் சம்பளத்திலும் பார்க்க அவனுடைய வருமானம் கூடுதலாக இருந்தது. இப்பொழுது அவளின் வருமானத்திலேயே அவன் தங்கியிருக்க வேண்டிய நிலைமை. ஆண்களிடம் இயல்பாகவுள்ள தாழ்வுச் சிக்கல் தலையெடுத்து விட்டது. அவனால் பொறுத்துக் கொண்டிருகக முடியவில்லை.



``மலர் ஜெர்மனியில் இலகுவாக வேலை கிடைக்குமாம். என்னோடு படித்தவர்கள் அங்கிருந்து எழுதியிருக்கிறான்கள். நானும் எத்தனை காலத்துக்கு இப்படி வேலையில்லாமல் இருப்பது? வெட்கமாயிருக்கும். குழந்தையும் வளர்ந்து கொண்டிருக்கிறாள். உன்னுடைய சம்பளம் மாத்திரம் எதிர்காலத்திற்குப் போதாது. நானும் உழைத்து நிறையச் சேமித்து தாமரையை பெரிய படிப்பு படிக்க வைக்க வேணும்".

``வருமானத்துக்காக வேண்டாம். கணவனும் ஒரு வேலை பார்க்கிறாரென்றால் எனக்கும் கௌரவம் தானே?. எங்களின் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எவரையாவது பார்த்துப் பேசி தொழில் எடுக்க ஏதாவது வசதிகள் இருக்கோ?"

``காசை வாங்கிக் கொண்டு அவன்கள்

சுத்துமாத்துப் பண்ணி ஏமாற்றும் லஞ்சப் பயல்கள். அவன்களிலை எனக்கு நம்பிக்கையில்லை. எனக்குத் தெரிந்த வெளிநாட்டு ஆட்களை அனுப்புகிற ஏஜன்சிக்காரர் ஒருவருடன் கதைத்தேன். பணத்தைக் கொடுத்து 15 நாட்களில் ஜெர்மனிக்கு விசா எடுத்து அனுப்புகிறன் என்று உறுதியாகச் சொன்னார். நம்பிக்கையான ஆள். ஆனால் அதற்குத் தேவையான பணமும் உங்களிருவரையும் பிரிந்திருப்பதும் தான் எனக்கு கஷ்டமாயிருக்கு''.

``துக்கப்படாதேங்கோ. தாமரையைப் படிப்பிக்க அதிக பணம் வேணும் தானே. அதற்காக சில வருடங்கள் பிரிந்திருப்பதை எண்ணிக் கவலைப்படாதேயுங்கோ. குழந்தைக்காக மனதை இருவரும் சமாளிப்பம். தோட்டக்காணியையும் பனந்தோப்பையும் ஈடுவைத்து காசு ஒழுங்கு பண்ணுவம்''

ஒரு மாசத்தில் அவன் விமானம் ஏறிவிட்டான். ஆரம்பத்தில் தவிப்பாகத் தான் இருந்தது. பாடசாலை வேலை, குழந்தை என்று அவள் மனதை ஈடுபடுத்திக் கொண்டாள். மாசத்துக்கு ஒரு கடிதமாவது அன்பொழுக அக்கறையோடு விசாரித்து அவனிடமிருந்த கடிதமும் பணமும் வந்து கொண்டிருந்தன. ஆறு ஏழு மாசங்களுக்குப் பின் துண்டுக்கடிதமும் பணமும் மட்டுமே வந்தன. வேலை அதிகம் நீண்டதாக எழுத நேரமில்லை. என எழுதியிருப்பான்.

காலம் போகப் போக.. எதுவுமே அவனிடமிருந்து வரவில்லை. ஜெர்மனியில் வேறொருத்தியுடன் மகன் வாழ்கின்றான் என்ற அதிர்ச்சித்தகவலை அவனின் அப்பா ஒரு நாள் வந்து சொல்லிக் கண்கலங்கிய போது அவளின் இதயம் வெடித்துவிடும் போலிருந்தது.

``ஐயோ பெருமானே! இதுவா என்பிள்ளையின் கதி?'' என அம்மா கதறியழுது கண்ணீர் சொரிந்தாள். அவளால் இந்த ஏமாற்றுச் செயலைத் தாங்கிக் கொள்ள முடியாமலிருந்தது. மலர் தனது கண்ணீரைத் துடைத்து, மூக்கைச் சீறி எறிந்து விட்டு, சாப்பாட்டுக்காக அழுத குழந்தையைத் தூக்கி இடுப்பில் அணைத்துக் கொண்டு நிமிர்ந்து நின்றபடி தாயை ஆறுதல்படுத்தினாள்.

அதன்பிறகு, அக்குடும்பத்துக்கு ஆண்துணையில்லை என்பதை ஈடுசெய்யும் வகையில் அம்மாவின் தம்பி முருகேசர் அவ்வப்போது வந்து போய்க்கொண்டிருந்தார். அவரும் பாவம்! அவரின் மனைவி நிரந்தர நோயாளியாகிப் படுக்கையாகி விட்டாள். பிள்ளைகளுமில்லை. அவளைக் கவனித்து பராமரிப்பது, வருமானத்திற்காக தோட்ட வேலைகளைப் பார்ப்பது முதலிய வேலை நெருக்கடிகளின் மத்தியிலும் அவர் இடைக்கிடை வந்து கடையில் சாமான்களை வாங்கித் தருவது, வேலி அடைப்பிப்பது, ஆட்டுக் குழை வெட்டிப் போடுவது, ஊர்ப்புதினங்களை தமக்கையிடம் பரிமாறுவது எனக் கவனித்துக் கொள்வார். முருகேசர் அந்த வீட்டுக்கு வராத நாட்கள் என்றால் அவர் தண்ணி போட்டிருக்கிறார் என்று கருத்து. தமக்கைக்கு அவ்வளவு பயம். அம்மாவுக்கும் தன் தம்பி மீது பாசத்துக்கு குறைவில்லை. களைப்புற்று அவர் வரும் நாட்களில் சாப்பாடு கொடுப்பது மற்றும் வடை, கொழுக்கட்டை, பணியாரம் செய்யும் நாட்களில் அவருக்கென எடுத்து வைக்க அம்மா தவறுவதில்லை. ``பாரி அக்கா.... பாரி அக்கா'' என்ற அவரின் குழைவான அழைப்பில் அம்மா குளிர்ந்து போய் விடுவாள். தாமரையையும் ஆசையோடு 'தாமரைக்குட்டி' எனக்கூறி அவ்வப்போது அவளின் கன்னத்தில் செல்லமாக கிள்ளுவார். பாவம் பிள்ளை குட்டியில்லாத மனிதன்!

◆

பாதையால் இறங்கி வயல் வரம்பில் நடக்கத் தொடங்கிய போது தூரத்தில் அவளின் வீடு தெரிந்தது. கால்கள் நடைபயின்ற போதிலும் மனம் வீட்டின் கதவைத் திறந்து உள்ளே சென்று நாளாந்த நிகழ்ச்சிகளை நிரல் படுத்தியது.

வீட்டுக்கு கிராமப் பாடசாலை யிலிருந்து வீட்டுக்கு வந்திருக்கும் மகள்



தாமரை. சாப்பிட்டு விட்டு, நாலாம் வகுப்பு ஒப்படைப்பாடங்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பாள். தன்னிலும் பார்க்க மகளை அதிகம் படித்தவளாக்கி விட வேண்டுமென்று மலர்விழிக்கு அப்படி ஒரு ஆவேசம். அதனால் மகளுக்கு தெரியாத பாடங்களை விளக்குவதும் வீட்டுப் பாடங்களைச் செய்வதற்கு உதவுவதும் அக்கறையாக மேலதிக அறிவூட்டக்கூடிய சித்திரப் புத்தகங்கள், சஞ்சிகைகளை வாங்கிக் கொடுப்பதுமாக இருப்பாள்.

பாவம் அம்மாவுக்கு வயதாகி விட்டது. வாழ்க்கையில் எவ்வளவோ களைத்துப் போய் விட்டாள். சாப்பிட்டு விட்டு இப்போது மெல்லிய தூக்கம் போட்டுக் கொண்டிருப்பாள்.

நினைவலைகளில் மிதந்ததால் மலர்விழிக்கு தனது வீட்டுக்கு அருகில் வந்துவிட்டது கூடத் தெரியவில்லை.

ஏன் வெளிப்படலை ஆவென்று திறந்தபடி கிடக்கிறது. அம்மாவின் ஆடுகள் வெளியேறி, பிறத்தியாரின் தோட்டங்களின் பயிர்களை மேயப் போயிருக்குமே! சே! அப்படியிருக்காது. அம்மா பின்வளவில் ஆட்டுக்குட்டிகளுக்கு குழை கொடுத்துக் கொண்டிருப்பா.

விறாந்தையில் செருப்பைக் கழற்றிவிட்டு, குடையை மடக்கிச் சுருட்டியபடி ''தாமரை! தாமரைச் செல்லம்' எனக் குரல் கொடுத்தாள்.

அவள் ஓடோடி வரவில்லை. உள்ளே சென்று அறையில் பார்த்த போது......

அந்த எட்டுவயதுச் சிறுமி கூம்பிச் சுருண்டு பயத்தால் உடம்பு பதற விக்கிக் கொண்டிருந்தவள் 'அம்மா' என வெடித்தலறத் தொடங்கிவிட்டாள்.

தொடைகளிலிருந்து கசிந்து கொண்டிருந்த இரத்தத்தால் சட்டை நனைந்து போயிருந்தது.


மலர்விழி அதிர்ந்து போனாள்.

''என் செல்லத்துக்கு என்ன நடந்தது? ஏன் இரத்தம் வருது? - பதறியபடி கேட்டாள்.

''அம்மம்மா கோயிலுக்குப் போட்டா. இன்னும் வரேல்லை. தனிய இருந்த என்னை முருகேசுத் தாத்தா தூக்கிக் கட்டிப்பிடித்து என் சட்டையை உயர்த்தி யங்கியைக் கழட்டிப் போட்டு...... அம்மா சரியாக நோகுது. பயமாயிருக்கு'' தாமரை விக்கி விறிட்டழுதபடி சொன்னாள். அவளுக்குத் தண்ணீர் பருக்கி ஆதரவாக அணைத்து முதுகைத் தடவிக் கொடுத்த போதிலும் மலர்விழியின் மனம் அக்கினிக் குழம்பாக கொதித்தெழுந்தது.

பிரசாதமும் பூசைத் தட்டுமாக உள்ளே வந்த அம்மா நிலைமையை அறியாமல் இண்டைக்கு சதுர்த்தியெல்லே. அபிஷேகங்களிலிருந்ததால் பூசை சுணங்கிப் போச்சு. தாமரைக்குட்டிக்கு மோதகமெல்லாம் கொண்டு வந்திருக்கிறன் குடு'' என்று ஆசையோடு நீட்டிய போது மலர்விழி அதைத்தட்டி விட்டு விட்டு ''உன்ரை தம்பி முருகேசன் குழந்தைக்குச் செய்திருக்கிற கொடுமையைப் பாரம்மா'' என விம்மி வெடித்த படி நின்ற சிறுமியை முன்னால் நிறுத்தினாள்.

''அம்மம்மா'' என அலறிக் கொண்டு அவள் கட்டிப்பிடித்த போது அவளின்



துடைகளில் வழிந்து கொண்டிருந்த இரத்தம் பாட்டியின் சேலையையும் கறையாக்கியது. பார்வதிப் பாட்டிய அதிர்ச்சியால் வாயடைத்து கண்கள் நீரைச் சொரிய உறைந்து போய் நின்றாள்.

ஆவேசங் கொண்ட மலர்விழி மகளைக் குளியல் அறைக்கு கூட்டிச் சென்று சட்டையைக் களைந்து விட்டு, சிதைந்த உறுப்பையும், இரத்தம் படிந்த கால்களையும் கழுவி, வேறு சட்டை மாற்றிக் விட்டு, மகளைத் தோலில் போட்டுக் கொண்டு புறப்பட்ட போது, பக்கத்து வீட்டு லட்சுமி ஆச்சி சிறுமியின் அழுகுரலின் காரணமறிய பரப்பரப்பாக உள்ளே வந்தாள்.

''என்ன பிள்ளை மகளுக்குச் சுகமில்லையே. தூக்கிக் கொண்டு புறப்பட்டிட்டாய்?'' வஞ்சமில்லாமல் லட்சுமி கேட்டாள்.

''இந்தக் குருத்தை அந்தக் கிழட்டுத்தாட்டன் முருகேசன் முறிச்சுப் போட்டான்'' பூடகமாக மலர்விழி சொன்னதை லட்சுமி புரிந்து கொண்டாள்.

''பிள்ளை இதுக்கு ஏன் வைத்தியரிட்டை போய் எல்லாருக்கும் பிரசித்தப்படுத்துகிறாய். பிள்ளையின்ரை எதிர்காலம், குடும்பத்தினரை கௌரவம் எல்லாம் வெளியே தெரிந்திடும். இது ஏதோ புதுச்சங்கதியே. எங்களின்ரை சிறு வயதிலும் எத்தனை பேருக்கு இப்படி நடந்திருக்கு. ஆரும் வெளியில சொல்கிறதில்லை. விஷயம் வீட்டோட அடங்கி விடும். கொஞ்சம் தேங்காயெண்ணையும் மஞ்சள் மாவும் எடணை பார்வதி அக்கா. நான் பதமாய்ச் சூடாக்கித் தாறன். ரெண்டு தரம் காயம் பட்ட இடத்துக்குப் பூச எல்லாம் சரியாய்ப் போயிடும். இதுக்கேன் வைத்தியரிட்டை அவசரப்பட்டுக் கொண்டு போறாய் பிள்ளை?''

பக்கத்து வீட்டு லட்சுமியின் தேற்றுதல் வார்த்தைகளால் மலர்விழிக்கு ஆத்திரம் கொப்பளித்தது.

''அந்தக் காலத்திலேயிருந்து நீங்கள் இப்படியானவற்றை பொத்தி மறைத்துக்குக் கொண்டு வந்ததால் தான், இது தொற்று நோயாக இன்று சமுதாயத்தில் எங்கும் படர்ந்து பரவிப் போயிட்டுது''

மலர்விழி தாமரையைத் தூக்கித் தோளில் போட்டபடி விடுவிடென நடக்கத் தொடங்கினாள்.

''எங்கை பிள்ளை வைத்தியரிட்டை யே போறாய்?''

''வைத்தியரிடமல்ல, போக வேண்டிய இடத்துக்கு - பொலிசுக்கு''

மகளைச் சுமந்து கொண்டு வயல்வெளியை ஊடறுத்து மலர்விழி போய்க் கொண்டிருந்தாள்.

*** *** ***

வயல்வெளிக்கு வடக்கே ஊர்மனையை அடுத்துள்ள கிணற்றை நோக்கி ஓடும் ஆண்களின் இரைச்சலோ, ஒப்பாரி வைத்தபடி செல்லும் பெண்களின் ஓலமோ மலர்விழியின் காதில் விழவில்லை.

கிணற்றில் முருகேசு அம்மானின் சடலம் மிதந்தபடி கிடந்தது.

# பெண்களுக்கான சட்ட உதவிகள்

பால்நிலை காரணமான வன்முறைகளை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் பொழுது பெண்களுக்குத் தேவைப்படும் சட்ட உதவிகள் ஆண்களிலும் பார்க்க வேறுபடானவை. பால் வேறுபாடு காரணமாக பெண்கள் தமது வாழ்க்கையில் வித்தியாசமான அனுபவங்களுக்கு உள்ளாவதனால் அவர்களுக்கு திட்டவட்டமான தீர்வமைவு அவசியம்.

அடிக்கடி பெண்களின் சட்டத்தேவைகள் அவர்களில் பால் உடலுறவு முதலியவற்றுடன் பிணைந்ததாக காணப்படுகின்றன. ஆண்களோடு அவர்களுக்குள்ள தொடர்புகளும் இணைந்து செயல்புரிவதன் விளைவாக ஏற்படும் பிரச்சினை சட்டச் சிக்கல்களின் உயிர்க்கூறுகளாயிருக்கின்றன. இவ்வாறான சட்டத் தீர்வாய்வுகளில் பெரும்பாலானவை, பெண்களைப் பாதிக்கும் வீட்டுவன்முறை சார்ந்த பாலியல் வல்லுறவு, தகாப்புணர்ச்சி, பாலியல் தொந்தரவுகள் போன்றவையே. இவை குற்றவியல் சட்டத்திற்குட்பட்ட பிரச்சினைகள். பிரிந்து வாழ்தல், விவாகரத்து, ஜீவனாம்சம், பராமரிப்பு உதவிப் பணம், பிள்ளைகளின் பாதுகாப்பு, மரபுரிமைச் சொத்து பேன்றவை பிரச்சினைகள் குடிசார் சட்டங்களுக்கு உட்பட்டவை. வீட்டைச் செயற்களமாகக் கொண்ட வழக்குகளினால் தொடர்பாக ஆண்களிலும் பார்க்க பெண்களுக்கே கூடுதல் பாதிப்புகள் உண்டாகின்றன. சட்ட உதவி செயற்திட்டங்கள் முடிந்தவரை, இவ்வாறான வழக்குகளில் விசேட சட்டக் கவனிப்பும், சமூக மற்றும் உளவியல் ஆதரவுகளும் வழங்குவது அவசியம்.

பெண்கள் சட்டப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருப்பதில் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசாரச் சூழ்நிலைகள் தமது பங்கை வகிக்கின்றன. இவ்வாறான பிரச்சினைகள் ஆண்களைப் பொறுத்தவரை ஏற்படுவதில்லை. எனவே தான், பெண் என்ற நிலை காரணமாக எழும் திட்டவட்டமான பால்நிலை சாந்த வழக்குகளில் தெளிவான அக்கறை செலுத்தப்பட வேண்டுமென சில சட்ட உதவி அமைப்புகள் வலியுறுத்துகின்றன. உதாரணமாக, நிர்வாக நடைமுறைகளில் கூட பெண்கள் தனித்துவமானவர்கள் என்ற வகையில் உள்ளாகும் அனுபவங்கள் ஆண்களைப் போல் ஒரே மாதிரியாக இல்லாமல் வித்தியாசமாக உள்ளன. இந்த ஆய்வானது, விதவைப் பெண்கள் யுத்தத்தில் இறந்த அல்லது காணாமற் போனவர்களின் மரணச்சான்றிதழ்களைப் பெறுவதிலுள்ள சிக்கல்களுக்கு அப்பெண்களின் சார்பில் அதில் குறுக்கிட்டு தீர்வு பெற்றுக் கொடுக்குமாறு சட்ட உதவி செயற்திட்ட அமைப்புகளுக்குச் சுட்டிக்காட்ட உதவக்கூடும்.

சில சட்ட உதவி அமைப்புகள் தெளிவான தன்மை கொண்டு பெண்களின் சட்டத் தேவைகளுக்கு குறிப்பிட்ட ஓரளவுக்கு உதவ வேண்டுமென ஒப்புக் கொண்டுள்ள போதிலும், பெரும்பாலான சட்ட உதவி நிறுவனங்கள் பால்வகை வேறுபாட்டில் கூருணர்வு கொண்டவையாக இருப்பதில்லை. எனவே தான் பெண்கள் சட்ட உதவி பெறுவதும் குறிப்பாக சட்டத்துறையை நாடுவதும் அதனைப் பெறுவதென்பதும் சிக்கல் நிறைந்து அவர்களுக்குப் பெரும் சுமையாக உள்ளது.

பெண்களைப் பொறுத்தவரை சட்ட வழிமுறையில் நடவடிக்கை எடுப்பதென்பது பொருளாதார ரீதியில், உளவியல் ரீதியில், பழக்க ரீதியல், சமூகக் காரணங்களின் அடிப்படையில் சிக்கல் நிறைந்ததாக உள்ளது. குடும்ப அமைப்பில் அதிகளவு பாதிப்புக்குள்ளாகக் கூடியவர்களாயிருப்பதால், நெருக்கடியில் இருந்து தப்புவதற்கு பெண்கள் சட்ட உதவியை நாடுவதே வழியாக உள்ளது.

## பெண்களுக்கான சட்டஉதவிச் செயற்திட்டங்கள்

சட்ட உதவி நிறுவனங்களும் அவற்றின் நிகழ்ச்சித்திட்டங்களும் ஆண், பெண் இருபாலாருக்கும் உதவியளிப்பதை உள்ளடக்கிய பொதுவான ஆணையைக் கொண்டவை. இவ்வமைப்புக்களிற் சில கிளைகள், விதவைகள், நோயுற்ற கணவரைக் காப்பாற்றும் பொறுப்பிலுள்ள பெண்கள், துஷ்பிரயோகத்துக்குள்ளான பெண்கள் ஆகியோர் சமூக, கலாசார, உளவியல் ரீதியில் சமூகத்தில் பாதிப்புற்ற நிலைமையில் இருப்பதனால் இவர்களுக்கு உதவி அளிக்கப்பட வேண்டும் என்ற உணர்வைக் கொண்டிருக்கின்றன. எனினும் அந்நிகழ்ச்சித்திட்டத்துக்குப் பொறுப்பாக இருப்பவரின் மனச் சாட்சியிலேயே இதைத் தீர்மானிப்பது தங்கியுள்ளது. அவர் இவர்களைப் பற்றிய ஆவணங்களைப் பரிசீலிக்கும் போது இவை சரியான நிலைமையை முழுமையாகப் பிரதி பலிப்பதில்லை. புள்ளி விபரங்கள் எப்போதும் விளக்கமாக இருக்காது. அல்லது பால்வகை கூட்டுத்தொகை எப்போதும் முறையற்ற தாகவே இருக்கும். பெண்களில் சரியாக எத்தனை பேர்களுக்கு எந்த அளவான சட்ட உதவி அளிக்கப்பட்டதென்றோ, சட்டஉதவி நிகழ்ச்சித்திட்டத்தின் வழியாக எத்தனை பெண்கள் தீர்வு பெற்றனர் என்பதையோ உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத நிலைமைகளே அலுவலகங்களில் நிலவுகின்றன. எனினும், சில அமைப்புக் களினால் மேலிடத்தின் பார்வைக்கென

அனுப்பப்பட்ட தெளிவான வழக்குகளிலிருந்தும், அவற்றிற்கு நேர்காணலுக்கென அழைக்கப்பட்டவர்களின் கூற்றுக்களிலிருந்தும் பெண்களுக்கென விசேடமாகச் செயற்படுத்தப்படும் சட்ட உதவித்திட்ட நிகழ்ச்சிகள் குடிசார் மற்றும் குற்றவியல் சம்பந்தமான விடயங்களில் உதவியளித்து வருவதை தெரியப்படுத்துகின்றன.

விசேடமாக பால்வகை சார்ந்த நிலைப்பாட்டில், குறிப்பாகப் பெண்களின் சட்டஉதவித் தேவைகளை நடைமுறைப்படுத்தி வரும் இரு அமைப்புக்களின் செயற்பாடுகளைப் பற்றி இங்கு ஆராயப்படுகின்றது. இவற்றில் ஒரு நிகழ்ச்சித் திட்டமானது அலுவலக வசதியில்லாமையால் போலும் பெயரளவிலேயே செயற்படுகின்றது. முன்னர் இவ்வமைப்பு சட்ட அறிவுரைகள் அளிப்பது நீதிமன்ற வழக்குகளில் ஆதரித்து வாதிடுவதற்கு ஒழுங்கு செய்வது, சட்டவாதிகளை பிணக்குகளில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்துவது போன்ற சேவைகளை அளித்தது. இப்பொழுது அது இயங்குகின்றதா என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது. இதன் கள ஆய்வாளர் இத்திணைக்கள நிர்வாகக் குழுவினர்களையோ அமைப்பின் முகவரியொன்றையோ தேடிக் கொள்ள முடியாத கஷ்டமான நிலையிலுள்ளனர்.

அடுத்த அமைப்பு வீட்டு வன்முறைகளால் பாதிப்புற்ற பெண்களின் துல்லியமான தேவைகளையும் கருத்தில் எடுத்துக் கொண்டு பல்வகை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது. முழுவதுமாக பெண்களையே அலுவலர்களாகக் கொண்டுள்ள இவ்வமைப்பு, பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதன் மூலமாக பால் சமத்துவத்தையும் தமது சொந்த விஷயங்களில் தீர்மானம் மேற்கொள்ளும் வலுவுள்ளவர்களாக ஆக்குவதையும் குறிக்கோள்களாகக் கொண்டு அவற்றை நோக்கி தனது திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. அதனால், அது சட்ட உதவிப் பிரிவு, உளவியல் ஆதரவு, மருத்துவக் கவனிப்பு, பெண்கள் விடுதி முதலியவற்றைக் கொண்ட பல்வகை நோக்கங்களில் ஈடுபட்டு வருகிறது.

இவ்வமைப்பு பெண்களின் தனிப்பட்ட அல்லது குடும்ப அளவில் அவர்களுக்கு ஏற்படும் குற்றவியல் மற்றும் குடியியல் சம்பந்தமான பிரச்சினைகளை ஒப்புக் கொண்டு அவற்றின் விளைவால் ஏற்படும் திருமண வன்முறை பாலியல் வல்லுறவு, தகாப்புணர்ச்சி, பராமரிப்பு போன்ற பிரச்சினைகளையும் காணி விஷயங்களில் இணக்கப்பாட்டை யுண்டாக்குவதிலும் தன்னுடைய பணிகளில் உள்ளடக்கி ஒன்றிணைத்துக் கொண்டுள்ளதால், சட்ட உதவியை நாடும் வாடிக்கையாளர்களுக்கு நடைமுறைக்குரிய உதவி களை வழங்குவதிலும் கூடுதலாக உளவியல் ஆதரவு வழங்குவதிலுமே அங்கு பணி புரிபவர்கள் அதிகளவு முன்னுரிமை கொடுப்பதாகத் தெரிகிறது. வாடிக்கையாளர்கள் சிலரின் அதிக சிக்கலானதும் பன்முகப்பட்டதுமான வழக்குகளைக் கையாள்வதில் இத்திட்டத்தின் செயல் நோக்கம் பற்றாக்குறையாக வேயுள்ளது என்பதும், அடிப்படைச் சட்ட உதவிகள் தொடர்பான சாதாரண வழக்குகளில் அதிகப்படியான நிறுவனமயஞ் சார்ந்த முன்னுரிமை அளிக்கப்படுவதும் ஆதாரபூர்வமாகத் தெரிய வந்துள்ளது. இந்நிறுவனத்தின் பிராந்திய அலுவலகம் ஒன்று தனது தலைமைகத்துக்கும் மற்றும் சட்ட உதவி வழங்கும் முகவர்களுக்கும் சட்ட இடையீடுகளை பார்வைக்கு அனுப்புவதை மட்டுமே தனது பணியாக கொண்டுள்ளது. இது இவ்வமைப்பின் முன்னுரிமைகள் எவை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது.

இவ்வமைப்பில் அவமதிப்புக்களின் மத்தியிலும் கூட ஏராளமான வாடிக்கையாளர்கள் இந்நிலைத்திற்கு வருகிறார்கள். எனினும், வரும் வாடிக்கையாளர்களின் சரியான எண்ணிக்கை, சட்டம் தொடர்பான செயற்பாடுகளில் இவ்வமைப்பின் இடையீடுகளின் பரப்பளவு, என்பவை தெளிவற்றதாக உள்ளன. சரியான புள்ளி விவரத் தரவுகள் அல்லது தனிப்பட்டவர்களின் வழக்குகளின் பரீசலனை அறிக்கைகள் தொடர்பான முழுமையான பதிவேடுகள் இவ்வலுவலகத்தில் இல்லாமலிருப்பதே காரணம்.

சட்ட உதவி வழங்கும் நிறுவனங்களால் பாரிய அளவில் அல்லாமல் பால்வகை குறித்து தெட்டத் தெளிவாக பெண்கள் எதிர்நோக்கும் சட்டச்சிக்கல்கள் குறைந்தளவில் ஒப்புக் கொண்டிருப்பதே இலங்கைப் பெண்களுக்கு சட்ட உதவிக்கான வழிவகை ஏற்பாடு செய்வதில் மிகக் குறிப்பிடத்தக்க சிக்கல்களில் ஒன்றாக இருப்பதை திரும்பத்திரும்ப அழுத்திக் கூற வேண்டியது அவசியமாயுள்ளது.

இதன் விளைவாக பெண்களின் திட்டவட்டமான பிரச்சினைகளை முன்னுரிமைப் படுத்துவதிலும் பெண்களின் பிரச்சினைகளில் அக்கறை கொண்டு சட்ட உதவி புரிந்துவரும் அமைப்புகள் குற்றவியல் வழக்குகளுக்கு நிதி வளங்களைப் பெறுவதிலும் பின்னடைவு ஏற்படுகின்றது. எல்லா வகையான சட்ட உதவிகளையும் மேற்கொண்டு வரும் அமைப்பொன்றின், தனியான பெண்கள் பிரிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப்பகுதியில் நிதி வசதியில்லாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதன் விளைவாக 18 வயதுக்கு மேற்பட்ட, பாலியல் வல்லுறவுக்குள்ளான இளம் பெண்களின் வழக்குகளை இவ்வமைப்பின் சிறுவர் பிரிவே கவனிக்க வேண்டியிருக்கிறது.

## சட்ட உதவி பெறுவதற்கான வாய்ப்புக்கள்

பொதுவாகச் சட்டங்களைப் பற்றி பொதுமக்களின் உணர்வு மேலோங்குவதுடன், சட்ட உதவி வழங்கும் நிலையங்களையும் அவற்றோடிணைந்த சேவைகளையும் ஊக்குவித்து வளர்ப்பது சட்ட உதவி கிடைப்பதற்கென மிக முக்கிய அம்சமாகும். அநேகமான நிகழ்ச்சித் திட்டங்களில் உதவி புரிவதற்கு மேலிடத்திலிருந்து கிடைத்துள் கட்டளைகளை விளம்பரப்படுத்துவதற்கான கணிசமான தொகை ஒதுக்கப்படுகின்றது.

சட்ட உதவி பெற விரும்புவர்களில் சிலர் கடித மூலமாக இவ்வமைப்புகளுடன் தொடர்பு கொள்வதாகவும் தெரிகிறது. உதவி வழங்கப்படுவதைப் பற்றி முடிவெடுக்கப்படு முன்னர் ஆதாரமான சான்றுகள் தேடிப் பெறல், தெளிவுபடுத்தல்கள் முதலிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளதால் இந் நிறுவனங்களுக்கு நேரில் வந்து விஷயங்களை விளங்கப்படுத்துவதற்கு ஏழ்மை, நீண்ட தூரப் பிராயணம் போன்ற காரணங்கள் வாடிக்கையாளர்களுக்குத் தடையாகவிருப்பதை இரு நிறுவனங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. எனினும், அவசரமாகச் சட்ட உதவி தேவைப்படுவோர் இவர்களில் சிறு தொகையினராக இருக்கக்கூடும். ''ஜனநாயகத் திட்டத்தில் குடிமக்களின் பங்களிப்பு'' சேகரித்த புள்ளி விபரக் கணக்கின் முடிவின்படி சட்ட உதவி பெறுவதற்கு சமூக, பொருளாதார வகைப்படுத்தல் மூலம் மிகப் பொருத்தமானவர்கள் மாதத்துக்கு 5000 ரூபா வருமானம் பெறுபவர்களாக இருக்கலாம் என்பது மறைமுகமாக மேற்கொண்ட கணிப்பீடு மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. எவ்வாறெனினும் சட்ட உதவி மிக அவசரமாகத் தேவைப்படாதவர்கள் அவ்வாறான ஒருவழி இருப்பதை தெரிந்து வைத்துள்ளனர்.

சட்ட உதவிக்கான வாய்ப்புகள் இருக்கின்றதென்பது பரவலாக அறியப் படாமலிருந்த போதிலும், தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பயன்படுத்துகின்ற குழுவினரின் எல்லைக்குள்ளேயே அது வைத்திருக்கப் படுகிறது. சட்ட உதவி வாய்ப்புக்களிருக்கின்ற தென்பது சாதாரணமாக சம்பந்தப்பட்ட தொண்டர் நிறுவன வட்டாரத்திலும் அவர்களின் வாடிக்கை யாளர்களினது மட்டத்திலுமே அறிந்து கொள்ளக்கூடியதாக மறைத்து வைத்திருக்கப் படுகிறது.

அதே வேளையில் பொதுமக்களின் தூண்டுதலால் ஏற்பட்ட விழிப்புணர்வை அவமதித்து ஒதுக்கிவிட்டு, இச்சட்ட உதவித்திட்டங்களின் மூலமாக எந்தளவுக்கு வாடிக்கையாளர்கள் உதவிகளைப் பெற்றார்கள் என்பது மூடுமந்திரமாக உள்ளது. ஏனைய சட்ட உதவி நிகழ்ச்சித்திட்ட அமைப்புகளுக்கு சட்ட உதவிக்காக விண்ணப்பித்தவர்களின் கோரிக்கைகளை அனுப்பி வைக்கும் கருவியாகவே சில அமைப்புகள் இயங்குவதையும் காணலாம். சில அமைப்புகள் திட்டவட்டமான அமைப்பு ரீதியிலான கட்டளைகளால், குறித்த சில வழக்குகளை ஏற்க முடியாதிருக்கின்றன. மேலும் சில அமைப்புகள் அதிக சிக்கலான வழக்குகளை கையாளலாம் என்ற நம்பிக்கையோ, தொழில்சார் ஆற்றலோ இல்லாமையால் அவற்றை ஏற்காமல் நிராகரித்து விடுகின்றன. இப்படியே சில நிகழ்ச்சித்திட்டங்கள் வழக்கில் இணக்கப்பாடு, நஷ்டஈடு மற்றும் மரணச் சகாய நிதி பெற்றுக் கொடுக்க விண்ணப்பித்தல் போன்ற துணைச் சட்ட விஷயங்களிலேயே ஈடுபடுகின்றன.

பெண்கள் சட்ட உதவியைப் பெறக்கூடிய வாய்ப்புகளிருக்கின்ற போதிலும் அவ்வுதவிகள் தயாராகவும் சமமாகவும் வழங்கப்படும் நிலையில் அவற்றைத் தடுப்பதற்கு அல்லது தாமதப்படுத்துவதற்கு பலவிதமான நிர்ப்பந்தங்கள் இருப்பதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. சட்ட உதவிகள் அளிக்கும் சில அமைப்புக்களின் பிராந்திய அலுவலகங்கள் சில வேளைகளில் சட்டஞ் சார்ந்த அறிவுரைகளைக் கூறி வாடிக்கையளர்களை நீதிமன்றுகளில் வழக்குத் தொடர வேண்டிய அவசியம் இருப்பின் தலைமையகத்துடன் கலந்தாலோசிக்குமாறு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதனால் வழக்குத் தொடரவுள்ளவர்களுக்கு மேலதிகமான செலவு செய்யவும் கடுமையாக முயற்சி எடுக்கவும் வேண்டியுள்ளது. இதன் விளைவாக துரிதமாகச் சட்ட ரீதியில் தமது குறைபாடுகளை இவர்கள் தீர்த்துக் கொள்வதில் சுணக்கம் ஏற்படுகிறது.

சில நிறுவனங்களின் சட்ட உதவி நிலையங்கள் வாரத்தில் ஒருநாள் மட்டுமே செயற்படுகின்றன. வார நாட்களில் சில நிறுவனங்களில் ஒரு வழக்கறிஞர் மட்டுமே இருப்பார். ஏனையவற்றிலோ நீதிமன்றில் பிரசன்னமாக வேண்டிய அவசியமேற் பட்டாலேயே சட்டத்தரணிகள் நிறுவனத்தால் அழைக்கப்படுவர். நிகழ்ச்சித்திட்ட முகவர் நிலையங்களில், உதவி கோரி வருபவர்களின் எண்ணிக்கை தொடர்பான புள்ளிவிபரங்கள் கிடைக்க முடியாதுள்ள போதிலும், நடைமுறைப்படுத்தும் அலுவலர்கள், பெரும் எண்ணிக்கையான பெண் சட்ட உதவி பெற்றுள்ளனர் எனக் குறிப்பிடுகின்றனர். சட்ட உதவிக்காக பரந்தளவு தேவை இருப்பதன் காரணமாக, நிகழ்ச்சித்திட்ட அலுவலகங்களில் வாடிக்கையாளரும் சட்டத்தரணியும் உட்கார்ந்திருந்து பரஸ்பரம் கருத்துப் பரிமாறித் தெளிவுபடுத்திக் கொள்ளும் செயற்பாடு அல்லது நம்பிக்கையூட்டும் அறிவுரைகள் எப்போதாவது மேற்கொள்ளப் படுவதில்லை. நேரநெருக்கடியே

இதன் காரணம். அதனால் வாடிக்கையாளர் விஷயத்தை புரிந்து கொள்ளும் உரிமை என்பது சமரசவிட்டுக் கொடுப்பென்றாகி விடுகிறது.

இதனோடிணைந்த மற்றொரு உண்மை யென்னவெனில், எவ்வகையான சட்டச் சேவைகள் எந்நேரத்தில் வழங்கப்படுகின்ற தென்பதை அறியாமலிருப்பதும் அதில் வாடிக்கையாளர்கள் கலந்து கொள்ள முடியாமலிருப்பதும் அவற்றைப் பெறுவதற்கு தடையாகவுள்ளது. சட்ட உதவி நிகழ்ச்சித் திட்டங்களில் சேவையாற்றும் சட்டத்தரணிகள் தமது வாடிக்கையாளர்களை மாலையில் அல்லது வேறொரு நேரத்தில் சந்திக்க விரும்பக்கூடும். இது பெண்ணின் போக்குவரத்தில், சமூக கலாசாரச் சிக்கல்கள் இரவில் தனிமையாகப் பயணஞ் செய்தல், குடும்பப் பொறுப்புகள் முதலியவற்றில் சிக்கல்களை உண்டாக்கக் கூடும்.

மற்றொரு வகையில் இது கிடைக்கக்கூடிய சட்ட உதவி பெறக்கூடிய வாய்ப்புக்களை இழந்துவிடச் செய்கிறது. சட்ட நடைமுறை தொடர்பான அறியாமை, உடனடியாகச் சட்ட உதவியை நாடாமை, தேவைப்படும் ஆவணங்களை முன்கூட்டியே பெற்றிருக்காமை, சட்டத்தின்படி குறிப்பிட்ட காலத்தை கடைப்பிடிக்கத் தவறியமை போன்ற காரணங்களினால் வாடிக்கையாளர்கள் தாமாகவே வாய்ப்புக்களை இழந்து விடுவதாக சட்ட உதவி அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

### சட்ட உதவி வழங்கப்படும் வாடிக்கையாளர்களும் வழக்குகளும்

ஒவ்வொரு நிறுவனமும் தமது சட்ட உதவிகளை எவ்வகையான வாடிக்கை யாளர்களுக்கு அளிக்க வேண்டுமென்பதை மையப்படுத்தி அதற்கான ஆணைகளையும் கொண்டுள்ளன. வாடிக்கையாளர்களைத் தெரிவு செய்யும் போது பிரதான தகுதியைத் தீர்மானிப்பதில், பொருத்தமான சட்டச் சேவையை பெறுவதற்கு வாய்ப்பில்லா தவர்களும், வழக்குகளுக்குச் செலவிடப் பணவசதியில்லாதவர்களும் கூடுதல் கவனத்தைப் பெறுகின்றனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சட்ட உதவி பெறுவோர் 18 வயதுக்கு மேற்பட்டோராக இருப்பதை புள்ளிவிபரங்கள் தெளிவுபடுத்துகின்றன. 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டம், அடிப்படை உரிமைகளை உள்ளடக்கி யுள்ளதால் அநேகமான சட்ட உதவி வழங்கும் அமைப்புக்கள், சட்டரீதியான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதிலேயே கவனத்தைச் செலுத்து கின்றன. தனி மனித உரிமை மீறல் தொடர்பான அநேக வழக்குகளில் பல சட்ட உதவி அமைப்புக்கள், உதவிகளை அளித்திருப்பதை அவர்களின் வகைப்படுத்தலில் இருந்து அறிய முடிகிறது. சென்ற தசாப்தங்களில் யுத்தத்தினாலும், சமூக அரசியல் அமைதியின்மையாலும் அழிவுக்குள்ளான எமது நாட்டில் இச்செயல் இன்றியமையாததும் தனிமுறைச் சிறப்பும் வாய்ந்தது. மனித உரிமை மீறல்கள் அரசின் செயற்பாடு / செயற்படாமை பற்றிய சட்ட வரையறைக்குள் அடக்கப் பட்டிருப்பதால், அரச சாரா உரிமை மீறல்களையிட்டு தற்போதுள்ள சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடர முடியாது.

இச்சந்தர்ப்பத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற அமைப்புகள் அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பாக வலுவான அதிக அளவிலான எல்லையைக் கொண்டுள்ளன எனத் தெரிகிறது. உதாரணமாக கிழக்கு மாகாணத்தில் உள்ள அதன் கிளை அலுவலகங்கள் சிறைக் கூடங்களில், பொலிஸ் நிலையங்களில், தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருப்பவர்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்றுகின்றன. கிழக்கில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கிளை அலுவலகங்களுக்கு கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளில் பெரும்பாலானவை படையினருக்கு எதிராக அல்லது படையினரிடமிருந்து கிடைக்கின்றன. ஆணைக்குழுவின் அலுவலகங்களுக்கு வருகை தரும் வாடிக்கையாளர்கள் பற்றிய புள்ளி விபரத்தைப் பெற்றுக் கொள்வது இயலாமலுள்ளது. பால்வகையான தகவல் விபரங்களும் அவர்களிடமிருப்பதில்லை. இவ்வமைப்புக்களின் தலைமை அலுவலகத்திலுள்ள பதிவேடுகளின் படி கிழக்கு அல்லாத பகுதிகளிலிருந்து உதவிக்கோரி வருவோர் காணி உரிமை பரம்பரைச் சொத்துரிமை, பராமரிப்புச்செலவு, தொழில்புரியும் வாய்ப்பு முதலியவற்றிற்கு தீர்வு தேடி வருபவர்களாக உள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

இச்சட்ட உதவித்திட்ட அமைப்புக்கள், மனித உரிமை மீறல் தொடர்பான விஷயங்களிலும் பார்க்க அதிகளவிலான அக்கறையை அரசின் முகவர்களால் அரசியல் உரிமைகள் மீறப்படும் சம்பவங்களிலேயே செலுத்திப் பாதுகாக்க முற்படுகின்றன. அதன் பயனாக அரசியல் உரிமை மீறல்கள் சம்பந்தமான வழக்குகளைத் துரிதப் படுத்துவதற்காக சட்ட உதவிகள் மிக விரைவாக அளிக்கப்படுகின்றன.

மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி விஷயங்களைக் கையாளும் சட்டத்தரணிகள் தமக்களிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி தமது பிரதான செயற்பாட்டுப் பரப்பெல்லை, சட்ட விரோதக் கைது, (சில சந்தர்ப்பங்களில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ்) தடுத்து

வைத்துத் துன்புறுத்தல், அரசியல் தடுப்புக் காவல் கைதிகள், காணாமற் போனோர், பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகம் போன்றவையும் மனித உரிமை மீறல் போன்றதே எனத் தெரிவிக்கின்றனர்.

காணாமற்போன மகன் அல்லது கணவனை கண்டு பிடிப்பது தொடர்பான அடிப்படை உரிமை வழக்குகளில் சட்ட உதவி அமைப்புக்கள் உதவியளித்துள்ளதாக பெண் வாடிக்கை யாளர்கள் தமது நேர்காணல்களில் தெரிவித்திருக்கின்றனர்.

சட்டஞ் சார்ந்த பொதுக்கருத்துப்படி, பெண்களின் உரிமைகள் மீறப்படுவதை, அடிப்படை உரிமைப் பிரச்சினைகளில் ஒன்றாக, அநேகமான அமைப்புகள் ஏற்றுக் கொள்வதில்லை. பல்வகையாக பெண்களின் மீது தெளிவான அக்கறையைக் காட்டினாலும், அவர்களின் உரிமைகள் தொடர்பான வழக்குகளை அடிப்படை உரிமை சட்ட விதிகளின் கீழ் அல்லாமல் சட்ட விதிகளின் கீழேயே பதிவு செய்து நடத்துகின்றன. பெண்களின் உரிமைகளும் மனித அடிப்படை உரிமைகளே என்பது இலங்கையில் இன்னமும் புறக்கணிக்கப்படுகின்றதென்பதுடன் பெண்களுக்கு கிடைக்கக்கூடியதாயுள்ள முக்கியமான சட்டவிதிகள் கவனத்தில் கொள்ளப்படாமலிருக்கின்றன என்பதும் தெளிவாகிறது.

## நடைமுறை சார்ந்த நோக்குகள்

சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டத்தை சரியாகச் செயற்படுத்துவது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிகள் சில சந்தர்ப்பங்களில் சிக்கல்களை உண்டாக்குகின்றன. சில சட்ட உதவி நிறுவனங்கள் தமது நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தரவுகள், புள்ளி விபரங்கள், வழக்குகள் பற்றிய விளக்கத்தாள்கள், வாடிக்கையாளர்களுக்கான அறிமுகப் படுத்தல்கள் முதலியவற்றை வழங்குவதில் நன்கு ஒத்துழைப்பதில்லை. அந்தரங்கத்தைப் பேண வேண்டுமென்பதற்காகவோ அல்லது இவர்களிடம் குறிப்பிட்ட தரவுகள் இல்லாமை காரணமாகவோ இவர்கள் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள் போலும். ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த திட்ட அலுவலர், தனது நிறுவனத்தில் தீர்மானத்தை மேற்கொள்ளும் குழுவினரிடமிருந்து அனுமதி கிடைத்தாலன்றி, எவ்வித விபரங்களையும் எமது ஆய்வுக்காகத் தர மறுத்துவிட்டார். ஆய்வுக்கென ஆரம்பத்தில் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி தமது களஆய்வு உத்தியோகத்தரை தொல்லைப்படுத்தி, அப்பெண்ணைத் துரத்திக் கலைத்து விட்டார்! இக்குறிப்பிட்ட சம்பவம் தொடர்பான நிறுவனத்தின் பிராந்திய அலுவலகங்களெனக் கூறப்படுபவற்றை அடையாளங் காணவே முடியவில்லை. அம் மாவட்டத்தில் இயங்கும் மற்றைய நிறுவனங்களுக்கும் அப்பகுதியில் இவ்வாறானதொரு அமைப்பு இருப்பது தெரியாது!

## நிறைவேற்றுக் கட்டமைப்புக்கள்

அநேக சட்ட உதவி நிலையங்களின் கொள்கை வகுப்புக் குழுமங்கள், நிர்வாக அடிப்படையில் தமது திட்டங்களை எவ்வாறாக நடைமுறைப்படுத்தவுள்ளன என்பதைச் சுட்டிக் காட்டினர். நிறைவேற்றுக்குழு, ஆட்சிக்குழு, இயக்குனர்சபை போன்ற நிர்வாகக் கட்டமைப்புகள் தமது கொள்கைக்குட்பட்ட பரப்பெல்லை, மற்றும் செயற்படுத்தவுள்ள விஷயங்களைச் சுட்டிக் காட்டின.

பல செயற்திட்டங்களில் சம்பளம் பெறுபவர்களும் பகுதி நேரத்தொண்டர்களும், அலுவலர்களும் வேறு வேறு பிரிவுகளாக பிரிந்து தொழில்சார் மட்டத்தில் செயற்படுகின்றன. இதற்குப் புறநடையாகக் காணப்படுகிறது சட்டக்கல்லூரியின் சட்ட உதவி நிலையம். அது வியாழக்கிழமைகளில் மட்டுமே ஒரு ஒருங்கிணைப்பாளரால் இயங்க வைக்கப்படுகிறது. அவருக்கு உதவியாக எவ்வித நிரந்தர ஊழியர்களும் வழங்கப்படவில்லை. இலங்கை பெண் சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவி நிலையம் இயங்குவதற்கு ஓரிடம் கிடைக்காததால் தற்போது செயலிழந்துள்ளது. சட்ட உதவி நிறுவனங்களின் பல பிரதேச மாவட்ட அலுவலகங்கள் குறைந்தளவு அலுவலர்கள் கூட இல்லாமலேயே இயங்குகின்றன. மாத்தறையில் WIN மற்றும் FRC அமைப்புகள் சர்வோதய அமைப்பின் வளங்களையும் அலுவலகத்தையும் பகிர்ந்து கொண்டுள்ளன.

சட்ட உதவிகளை அளிப்பதை மட்டும் வரையறையாகக் கொண்டிருக்காத நிகழ்ச்சித் திட்டங்களைப் பொறுத்தவரை, இவை அமர்த்தும் சட்டத்தரணிகள் தன்னார்வத் தொண்டர்களாக அல்லது அவர்கள் வழக்காடும் நாளுக்குரிய கட்டணத்தை தமது செலவுக்காகப் பெறுபவராக இருப்பர். மேல்மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வொன்றின்படி, குறிப்பிட்ட ஒரு சட்டத்தரணியின் சேவையைச் சட்ட உதவி வழங்கும் இரு அமைப்புகள் தமது அனைத்து செயல்முறைத் திட்டங்களுக்குமாக பகிர்ந்துள்ளமை தெரியவந்துள்ளது.

பால்வகை பற்றி கூருணர்வில்லாத அலுவலர்களால், பெண்கள் சட்ட உதவி பெறக்கூடிய வாய்ப்பை இல்லாமல் தடுத்து வலியுறுத்த முடியும். அது பெண்கள் பெறும் சட்ட உதவிகளின் முழுமையான தரத்தை

வெகுவாகப் பாதிப்பதாகும். அதனால் அவ்வமைப்பில் உதவிகோரி வரும் பெண் வாடிக்கையாளர்கள் அவமானகரமான சூழலுக்கு ஆளாகாமல் பாதுகாக்கப்பட்ட வேண்டியது முக்கியம். இவ்வாறான அமைப்பில் பெண் சட்ட அதிகாரி ஒருவர் சமூகமளிக்க ஏற்பாடு செய்யப்படுவதில்லை. அவ்வாறு ஏற்பாடு செய்யப்படுமெனில், பெண்களுக்கெதிரான வன்முறைகள் போன்ற பால்நிலை அடிப்படையான குற்றங்களை அழுத்தமாக வலியுறுத்திக் கூறக்கூடியதாக விருக்கும். பால்வகைக் கூருணர்ச்சிப்பாடு ஆண் பெண் ஆகிய இருபாலார்களையும் சார்ந்த அலுவலர்களுக்கு மிக அத்தியாவசியமானது. குறிப்பாக சட்டத்தை அமுல்நடத்தும் அதிகாரிகள் வழமையாகப் பெண்களுக்கெதிரான மனப்பாங்கு கொண்டவர்களாக விருப்பதை மாதிரி ஆய்வு புலப்படுத்துகிறது.

முழுமையாக நோக்குமிடத்து, சட்ட உதவி வழங்கும் அமைப்புக்களில் பால்வகைச் சமநிலை ஒன்றிலிருந்து மற்றது வேறுபட்டதாயுள்ளது. இரு செயற் திட்டங்களைத் தவிர, ஏனையவற்றில் பெண்பணியாளர்கள் - கொள்கை வகுக்கும் குழுமங்கள், சட்ட அலுவலர்கள், நிர்வாகிகள், உதவி அலுவலர்கள் எனப் பிரதிநிதித்துவப் பட்டுள்ளனர்.

## பொதுஜனத் தொடர்புகள்

ஒரு செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் சட்ட உதவி வழங்கும் நிறுவனங்களைச் சேர்ந்த சட்ட அலுவலர்களின் மனப்பான்மை மிக மிக முக்கியமானது. ஒரு செயற்திட்டத்தின் வெற்றியைப் பாதிக்கக்கூடிய காரணிகளாக, அதில் பணிபுரிபவர்கள் பெற்றுள்ள சட்டப் பயிற்சியின் அளவு, கூருணர்வுத் திறம், செயற்திட்டத்தில் ஈடுபட்டுள்ள பணியாளர்களிடம் உருவாக்கப்படுத்தப் பெற்றுள்ள பொறுப்புணர்வு என்பன விளங்குகின்றன. ஆபத்தான சிக்கலொன்றில் (பெண்களௌில் சில வேளை வன்முறை தொடர்பானதாகவும் இருக்கக்கூடும்) மாட்டிக் கொண்ட வாடிக்கையாளர்கள் சட்ட விதிமுறைகளுக்காக அணுகும் போது சட்ட உதவி அளிக்கும் நிறுவனம் அதனைப் பகுப்பாராய்ந்து அவர்கள் மீது அனுதாபம் காட்ட வேண்டும். மென்மையானதும் தகுதிவாய்ந்தது மான செயற்பாடு முறைகளை அவர்கள் கற்றுக் கொண்டால் தமக்கு எவ்வாறான சட்டமுறை தேவை என்பதை அவர்கள் அறிந்து கொள்ள உதவும்.

எல்லா அமைப்புகள் செயற்பாட்டுத் திட்டங்களும் இத்தன்மைகளை வெளிப்படுத்திக் கொள்வதில்லை. களஆய்வு உத்தியோகத்தர்கள் கூட, விம்புமிக்க தன்முனைப்பான மனப்பாங்கை கள ஆய்வாளர் மீதும், வாடிக்கையாளர் மீதும் காட்டுவதை உணர்ந்துள்ளனர். வழக்கு நடைபெறும் காலத்தில் பல சந்தர்ப்பங்களில் வாடிக்கையாளர்கள் அநேக தடவைகள் சட்ட உதவி வழங்கும் அமைப்புக்களுக்கு வந்து போகுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனரென்பதையும் கள ஆய்வுகள் மூலம் அறிய முடிகிறது. கல்வி நிறுவனம் ஒன்றிற்கு எதிராகத் தொடரப்பட்ட அடிப்படை உரிமை மீறல் தொடர்பான வழக்கொன்றில் அதன் வழக்காளியான வாடிக்கையாளர் ஏழு மாச காலத்துள் 30 தடவைகள் சட்ட உதவி நிலையத்திற்கு வந்து போக நேர்ந்ததென்பதை அறிய முடிகிறது.

வாடிக்கையாளர்கள் சிலருடன் நடத்திய உரையாடல்களில் குறிப்பிட்ட ஒரு உதவி வழங்கும் அமைப்பின் மீதும் அவர்களின் செயற்பாடுகளின் மீதும் திருப்தியின்மை, விரக்தி, கோபம் முதலியவற்றை வாடிக்கையாளர்கள் கொண்டிருப்பதை அறியக் கூடியதாயிருந்தது. ஒட்டு மொத்தமாக அவர்கள் சட்ட முறைமையிலேயே நம்பிக்கையற்றுப் போயிருக்கிறார்கள். ஏனையவர்கள், தாம் சட்ட உதவி பெறும் அமைப்புக்கள் தமக்கு சட்ட உதவி அளிப்பதுடன் மதிப்புடனும், புரிந்துணர்வுடனும் தம்மை நடத்துவதாகவும் தாம் உணர்வதாகத் தெரிவித்தனர். சில அமைப்புக்களின் கள உத்தியோகத்தர்கள் கடுமையாகச் செயலாற்றி வாடிக்கையாளர்களுக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதாகவும் இவ்வாய்வில் இருந்து தெரிந்து கொள்ள முடிந்தது.

முன்னர் குறிப்பிட்டவாறு, சட்ட உதவி நிலையங்கள் குறிப்பிட்டளவு சட்ட அலுவலர்களையே கொண்டுள்ளன. சில வேளைகளில் தொழில்சார் உதவியாளர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது. போதியளவு வசதிகளை குறிப்பாக உள்ளகக் கட்டமைப்பு மற்றும் நிர்வாகம் தொடர்பான வசதிகள் இல்லாத நிறுவனங்களில் வாடிக்கையாளர்களின் வழக்குகளில் நீதிமன்றில் தோன்றி வாதிடுவதற்காக சட்ட வழிகளைப் பற்றி எதுவும் அறியாத அகப்பட்ட சட்டத்தரணிகளிடம் வழக்குகள் ஒப்படைக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட ஒரு சட்ட உதவி வழங்கும் நிறுவனத்திடமிருந்து உதவி பெறும் சில பெண்களின் அனுபவங்களின்படி நீதிமன்றில் அவர்கள் தொடர்பான வழக்குகள் கூப்பிடப்படும் பொழுது, அந்நிறுவனத்தால் அவ்வழக்குக்கென ஒழுங்கு செய்யப்பட்ட சட்டத்தரணிகள் நீதிமன்றில் காணப்படுவதில்லை என அறிய முடிகின்றது.

( Cenwor அனுசரணையுடன்
கமலினி விஜேதிலக்க,
மைத்ரீ விக்கிரமசிங்க ஆகிய ஆய்வாளர்கள்
மேற்கொண்ட ஆய்வுகளின் அறிக்கை)

# பெண்களுக்கெதிரான பாரபட்சங்களை தடுப்பதற்கென உருவாக்கப்பட்ட சட்டங்கள்

மா.மங்களேஸ்வரி (சட்டத்தரணி)

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையால் 1979ம் ஆண்டு டிசம்பர் 18ம் திகதி பெண்களுக்கு எதிரான அனைத்து பாரபட்சங்களையும் இல்லாதொழித்தல் சார் இணக்க உடன்படிக்கை சேர்த்துக் கொள்ளப்பட்டு 1981ம் ஆண்டு செப்டெம்பர் 3ம் திகதி வலுவுக்கு வந்தது. இச் சமவாயத்தை இலங்கை அரசு 1981ம் ஆண்டு ஒக்டோபர் 5ம் திகதி பின்னுறுதிப்படுத்தியது.

இவ்வுடன்படிக்கை ஆண் பெண்களிடையே சமத்துவத்தை எய்துவதற்கு சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படும் தத்துவங்களையும் நியமங்களையும் எடுத்துரைக்கின்றது. முப்பது (30) உறுப்புரைகளைக் கொண்ட இவ்வுடன்படிக்கை யாது எவை பெண்களுக்கெதிரான பேதங்காட்டுதல் என்பதை வரையறுத்துக் கூறி அவற்றை முடிவுறுத்தலையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### எவை பெண்களுக்கெதிரான பாகுபாடு / பேதங்காட்டுதல்?

அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, குடியியல் அல்லது வேறேதேனும் பரப்பில் பெண்களின் அடிப்படைச் சுதந்திரங்கள் அங்கீகரிக்கப்படுதல், அனுபவிக்கப்படுதல், பிரயோகப்படுத்தலைப் பாதிக்கும் அல்லது மறுக்கும் செயல்கள் எவையும் பேதங்காட்டுதல் ஆகும் எனக் கூறுகின்றது.

எனவே பெண்களுக்கெதிரான பாரபட்சத்தை இல்லாதொழிக்க ஒவ்வொரு அரசுகளும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளாவன.

1. தேசிய அரசியலமைப்பிலும் ஏனைய அந்நாட்டு சட்டவாக்கங்களிலும் ஆண் பெண் சமத்துவக் கோட்பாட்டை உட்புகுத்தி சட்டம் மற்றும் ஏனைய வழிவகைகளினூடாக அதனை உறுதிப்படுத்துதல்.
2. பெண்களுக்கு எதிரான எல்லா விதமான பாரபட்சங்களையும் தடுப்பதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுத்தல்.
3. பெண்களுக்கு சமமான சட்டப்பாதுகாப்புக்களை வழங்குதல். அதாவது பெண்களுக்கு பாகுபாட்டை உருவாக்குகின்ற சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் வழக்காறுகளையும் சீர்திருத்துதல் அல்லது நீக்கிவிடுதல் என்பனவாகும்.

எனினும் பல்வேறு இன மத சமூகக் கலாசாரத்தைப்பின்பற்றும் மக்கள் வாழும் நாட்டில் சர்வதேச தராதரத்திற்கு ஏற்ப பொதுவான சட்டக்கோட்பாடுகளை உருவாக்கும் போது எந்தவொரு பிரிவினருக்கும் பாதிப்பு ஏற்படாதவண்ணம் அமையவேண்டும்.

இலங்கையின் சட்ட நிலைமையைப் பற்றி நோக்குவோமானால் 1981ம் ஆண்டில் சீடோ இணக்க உடன்படிக்கையை வலுவாக்கம் செய்து கொண்டுள்ள போதிலும் பாராளுமன்றச் சட்டமொன்றினால் உள்நாட்டுச் சட்டவாக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டால் மட்டுமே சட்ட ரீதியான முக்கியத்துவத்தை பெறும். ஏனெனில் சட்டவாக்கம் தொடர்பில் இலங்கை இருமைத்தன்மையை (Dualist Country) பின்பற்றும் நாடாகும்.

மேலும் பெண்களுக்கெதிரான சகல விதமான பாரபட்சங்களை இல்லாதொழித்தல் மீதான சமவாயத்திற்கான விருப்பிலான தாயேடு (Optional Protocol to the convention on the Elimination of Discrimination Against women) ஐ.நா. பொதுச்சபையால் சேர்த்துக்கொள்ளப்பட்டு 2000ம் ஆண்டு டிசம்பர் 22ல் அமுலுக்கு வந்தது. இலங்கை அவ்விருப்பிலான தாயேட்டை 2002 ஒக்டோபர் 15ம் திகதி பின்னுறுதிப்படுத்தியது. இதன் கீழான ஏற்பாடுகள் இலங்கைப் பிரஜைகளுக்கும் ஏற்புடையதாகும்.

1992ம் ஆண்டின் உடன்படிக்கையின் அமுலாக்கம் பற்றியும் பெண்களுக்கெதிரான சகல விதமான பாரபட்சங்களை இல்லாதொழித்தலை கண்காணிப்பதற்காகவும்

சீடோ குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதாவது இவ்வுடன்படிக்கையை கைச்சாத்திட்ட நாடுகளினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட நபர்களிலிருந்து இரகசியவாக்கின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 23 நிபுணர்கள் இதில் அங்கம்வகிப்பர். இக் குழுவானது நான்காண்டுகாலத்திற்கு சேவையாற்றும். சீடோ இணக்க உடன்படிக்கைக்கான அரசுகள் நான்காண்டிற் கொருமுறை தமது தேசிய அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டுள்ளன. குறித்த குழுவானது அரசாங்க கட்சியொன்றிடமிருந்து அறிக்கைக்கான வேண்டுகோளை விடுக்க முடியும்..

பாகுபாடான விடயங்கள் தொடர்பில் சீடோ குழுவிற்கு தனிப்பட்டவர்களும் முறையீடு செய்யலாம். அதற்கு

1. உள்நாட்டு நிவாரணம் திருப்தியில்லை
2. நிவாரணம் பெறமுடியாதுள்ளது என்பதைக் காட்ட வேண்டும்.

அரசுகளால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள், அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து சீடோ குழு தகவல்களைப் பெற்றுக்கொள்கிறது. இந்தியாவில் பெண்கள் அமைப்புக்கள் நிழல் அறிக்கை (Shadow Report) ஒன்றை தயாரித்து சீடோ குழுவிற்கு வெளிப்படுத்துகிறது.

இதுவரை பெண்களுக்கு எதிரான அனைத்து பாரபட்சங்களையும் இல்லாதொழித்தல் சார் இணக்க உடன்படிக்கைக்கு அமைய ஒரு சில சட்ட சீர்திருத்தங்களை ஏற்படுத்தியுள்ளது. இவற்றுள் குறிப்பிடக்கூடிய ஒன்று 1993ம் ஆண்டில் வரையப்பட்ட மகளிர் சாசனமாகும் **(Women Charter)**

**சாசனத்திலுள்ள பெண்கள் உரிமைகள்:**

1. அரசியல் சிவில் உரிமைகள்
2. குடும்பக்கட்டமைப்புக்குள் உரிமைகள்
3. கல்விக்கும் பயிற்சிக்குமான உரிமைகள்
4. பொருளாதார செயற்பாடுகள் மற்றும் அவற்றின் நன்மைகளைப் பெறும் உரிமைகள்
5. சுகாதார சேமநலம் மற்றும் போசாக்கு வசதிகளைப் பெறும் உரிமைகள்
6. சமூக பாரபட்சங்களிலிருந்து பாதுகாக்கப்படும் உரிமைகள்
7. பால்நிலைவன்முறைகளிலிருந்து பாதுகாக்கப்படும் உரிமைகள் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

மேற்குறித்த பிரமாணங்கள் அரசாங்கத்தால் எவ்வாறு செயல்படுத்தப் படுகின்றது என்பதை அவதானிக்கும் பொறுப்பு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட தேசிய கமிட்டியைச்சாரும். இக் கமிட்டிக்கு முறைப்பாடுகள் குறித்து நேரடியாக விசாரிக்க அதிகாரமில்லை யாயினும் பாரபட்சம் தொடர்பான முறைப்பாடுகளை பரிசீலனை செய்து சம்பந்தப்பட்டோருக்கு நெறிப்படுத்தல், அபிவிருத்திக் கொள்கைகள், சட்டங்கள் நிர்வாக நடைமுறைகள் என்பன சாசனப்படி கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கலாம்.. இச் சாசனம் பாராளுமன்ற அங்கீகாரத்துடனேயே வரையப்பட்டதாயினும் பாராளுமன்ற அதிகாரச் சட்டமொன்றின் மூலம் அது ஏற்றுக்கொள்ளப்பட்டால் மட்டுமே சட்டவலுவைப் பெறும்.

**அடிப்படை உரிமை**

இலங்கையின் அரசியலமைப்பை எடுத்துநோக்குமிடத்து அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் எனும் அத்தியாயத்தில் உறுப்புரை 12(1)இல் சட்டத்தின் முன் எல்லா ஆட்களும் சமம் அத்துடன் சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கு அனைவரும் உரித்துடையவர்கள் என ஏற்பாடு செய்கின்றது.

உறுப்புரை 12(2) பிரஜைகள் எவரும் இனம், மொழி, பால் அடிப்படையில் 2ம் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது என்கிறது.

உறுப்புரை 12(4) பெண்களின், குழந்தைகளின், வலது குறைந்த ஆட்களின் மேம்பாட்டிற்காக விசேட சட்ட ஏற்பாடுகளை அல்லது நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் இந்த உறுப்புரைகள் தடைசெய்யாது எனக் கூறப்படுகின்றது.

சமத்துவம், சம உரிமை, பாரபட்சமின்மை பற்றி இங்கு நோக்குவோமானால் முன்பு சமத்துவம் பற்றிக்கூறிவிட்டு பின்பு பெண்கள், குழந்தைகள், வலது குறைந்தோர் என்ற நிலையில் வைத்து பேசப்படுவது குறைபாடாக உள்ள போதிலும் போட்டி நிறைந்த அரசியல் பிரதிநிதித்துவம் பெண்களிற்கான தொழில்வாய்ப்பு போன்ற அம்சங்களில்

பெண்களிற்காக விசேட சட்டங்களை உருவாக்க வேண்டிய தேவை அரசுக்கு உள்ளது. ஆயினும் நடைமுறையில் பெண்கள் வெறும் வாக்காளர்களாகவே இருந்து வருகின்றனர். பெண்களை அரசியலில் ஈடுபடுத்தக்கூடிய முறைமைகள் எதுவும் கொள்கை ரீதியாக செயற்படுத்தப்படவில்லை.

### தொழில் தொடர்பாக பெண்கள்

பெண்களுக்கு எதிரான அனைத்து பாரபட்சங்களையும் இல்லாதொழித்தல் சார் இணக்க உடன்படிக்கையின் பிரிவு 11ன் படி ஆணுக்கு பெண் பாரபட்சமின்றி சமமான நியதி மற்றும் நிபந்தனைகளில் வேலைக்கமர்த்தப்பட வேண்டும் என தேவைப்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் பால்வேறுபாடின்றி 14 வயதுக்குட்பட்டவர்களை வேலைக்கமர்த்த முடியாது. ஆயினும் பெண்களை கைத்தொழில் நிறுவனங்களில் வேலைக் கமர்த்துவதாயின் நிபந்தனைகளாவன.

1. பெண்ணின் விருப்புக்கு மாறாக வேலைக்கமர்த்தலாகாது.
2. தொழில் தருநரிடமிருந்து எழுத்து மூலமான சம்மதம் பெறப்பட வேண்டும்.
3. காலை 6 மணி மாலை 6 மணி வரை வேலைக்கமர்த்தப்பட்ட பெண்கள் இரவு 10 மணிக்கு பின்னர் வேலைக்கமர்த்தப் படலாகாது.
4. இரவு வேலைக்கு 1 1/2 மடங்குக்கும் குறையாத கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டும்.
5. இரவுவேலை செய்யும் பெண்களின் சேம நலன்களை கவனிக்க பெண் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
6. ஓய்வெடுக்கும் அறை வழங்கப் படவேண்டும்.
7. ஒரு மாதத்தில் 10 நாட்களுக்கு மேல் அவ்வாறு வேலைக்கமர்த்த முடியாது.

இந்நிபந்தனைகள் முகாமைத்துவ தொழில்நுட்ப தன்மையில் பொறுப்பான பதவிகளிலுள்ள பெண்களின் உடலுழைப்பு அல்லது சுகாதார மற்றும் சேமநல சேவைகளில் வேலை செய்யும் பெண்களின் குடும்பத்தவரின் கைத்தொழில் நிறுவனங்களில் வேலை செய்யும் பெண்களுக்கும் ஏற்புடையதல்ல. மேற்குறித்த 7 நிபநதனைகளும் தொழிற்சாலையில் இரவில் வேலை செய்யும் பெண்களுக்கும் ஏற்புடையது.

### மகப்பேற்று நன்மைகள்

கடை காரியாலய ஊழியர் சட்டத்தின் கீழ (Shop and office Employment Act) கடை அல்லது காரியாலயங்களில் வேலை செய்யும் பெண்கள் முதலிரு பிள்ளை பிறப்புக்காக 84 வேலைநாட்கள் மகப்பேற்று விடுமுறைக்கு உரித்துடையவர்கள். இது உயிருள்ள பிறப்புத் தொடர்பில் பிரசவத்திற்கு முன்பு 14 நாட்களும் பின்னர் 70 நாட்களும் பயன்படுத்தலாம். மூன்றாவது குழந்தைக்கு 42 வேலை நாட்கள் விடுமுறைக்கு உரித்துடையவர்கள். இங்கு 3வது பிள்ளையிலிருந்து விடுமுறை நாட்கள் அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளமை சிறுவர் உரிமை பற்றிப் பேசிக்கொண்டே அதனை மறுக்கும் நிலைமையையே காட்டுகின்றது.

மகப்பேற்று நன்மைகள் கட்டளைச் சட்டம (Maternity benefits ordinance) ஆனது ஏதேனும் தொழிலில் கூலி அடிப்படையில் அல்லது ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்பட்டுள்ள பெண் வேலையாட்களுக்கு ஏற்புடையதாகும். இச் சட்டத்தின்படி பெண் வேலையாள் மகப்பேற்று நன்மையாக 12 வாரங்கள் உரித்துடையவர். இது மகப்பேற்றுக்கு முன்னர் 2 வாரங்களும் பின்னர் 10 வாரங்களுமாக வழங்கப்படும். இச்சட்டத்தின் படியும் இரண்டுக்கு மேற்பட்ட மகப்பேற்றிற்கு 6 வாரங்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

### பெண்களுக்கு எதிரான வன்முறைகள்

பெண்களுக்கு இழைக்கப்படும் குற்றங்கள் தொடர்பில் தண்டனைச் சட்டக் கோவையின (Pannal code) 1995ம் ஆண்டில் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன்படி பிரிவு 346ன் படி பாலியல் தொல்லை முதன் முதலில் குற்றமாக காட்டப்பட்டுள்ளது.

பிரிவு 363ன் படி பாலியல் வல்லுறவுக் குற்றமானது பின்வரும் சந்தர்ப்பங்களில் பெண்ணுடன் உடலுறவு கொண்டால் ஆண் குற்றம் புரிந்ததாக கருதப்படுவான்.

1. நீதி மன்றப் பிரிவினையிலிருக்கும் மனைவியுடன் (அவளது சம்மதமின்றி)

2. அச்சுறுத்தல் அல்லது சட்ட விரோதமான கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளபோது.
3. சித்தசுவாதீனமற்ற நிலை அல்லது மதுபோதையில் உள்ளபோது.
4. தனது சட்டபூர்வமான கணவன் என்ற நம்பிக்கையில்
5. 16 வயதிற்குட்பட்ட பெண்ணாயின்.

1995ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்த சட்டத்தின்படி பாலியல் உறவு சம்மதமின்றி இடம்பெற்றது என்பதை காட்ட உடற்காயங்கள் போன்ற சான்றுகள் அவசியமற்றது.

பிரிவு 364 (அ) முறையில்லாப் புணர்ச்சியை (தடுக்கப்பட்ட உறவு முறை ) தண்டனைக் குரிய குற்றமாக காட்டுகிறது.

மேலும் பாலியல் அவா நிறைவுக்காக ஏதேனும் உறுப்பை அல்லது பொருளை பெண்ணின் உடற்பாகத்துள் தொடர்புறுத்தி பாலியல் வல்லுறவு அல்லாத செயலை செய்தல், கட்டியிடுதல், பாலியல் தொடர்பான குற்றங்களில் சம்பந்தப்பட்டவரை வெளிப்படுத் கூடிய விபரங்களை வெளியிடல் என்பன குற்றமாக்கப்பட்டுள்ளது.

இவை (CEDAW) இன் பின்னராக கொண்டுவரப்பட்ட மிக முக்கியமான திருத்தங்களாக கொள்ளலாம்.

குற்றவியல் நடவடிக்கை கோவையின் **(Criminal Procedure Code)**

பிரிவு 30ன் படி பெண்களை தேடுதல் செய்ய வேண்டிய அவசியமேற்படும் போதெல்லாம் இன்னொரு பெண் அதிகாரியால் கடுமையான ஒழுக்கத்துடன் செய்யப்பட வேண்டும் என கூறுகிறது.

குடியியல் நடவடிக்கைக் கோவையில் திருத்தம் **(Civil Procedure Code)**

பராயமடையாத பிள்ளை சார்பில் வழக்கு வைப்பதற்கு தந்தைக்கு இருந்த உரிமை தாய்க்குமாக விரிவாக்கப்பட்டுள்ளது.

1995ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தண்டனைச்சட்டக்கோவை திருத்த சட்டத்தின்படி குற்றச்செயல்களுக்கு வழங்கப்படும் தண்டனை விபரம்

| குற்றச்செயல் | சிறைத்தண்டனை |
|---|---|
| | (ஆண்டுகள்) |
| 1. பாலியல் தொந்தரவுகள் | 05 |
| 2. சிறுவர்களை பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் | 05 முதல் 20 |
| 3. பாலியல் தேவைக்காகக் கடத்துதல் | 02 முதல் 20 |
| 4. சிறுவர்களைக்கடத்துதல் | 05 முதல் 20 |
| 5. தடுக்கப்பட்ட உறவுமுறையில் பாலியல் உறவு | 07 முதல் 20 |
| 6. பாலியல் வல்லுறவு | 07 முதல் 20 |
| 7. பாரதூரமான பாலியல் வல்லுறவு | 10 முதல் 20 |
| 8. (நியதிச்சட்ட ) 16 வயதுக்குட்பட்ட பெண் | 15 முதல் 20 |
| 9. (நியதிச்சட்ட )குற்றவாளி 18வயதிற்கு குறைவு - நீதிமன்றத்தீர்மானம் | |
| 10. பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தை காட்டும் செய்தி | 02 |
| 11.ஆபாசப்படங்களைக் எடுத்தல், கழுவுதல் | 02 |

தேசியத்துக்கான உரிமை தொடர்பில

தமக்கென ஒரு தேசியத்தை வைத்திருக்கவும், தமது சொந்த தேசியத்தை பிள்ளைக்கு கையளிக்கவும் பெண்களுக்கு உரிமையுண்டு என சீடோ ஏற்றுக் கொள்கின்றது. ஆயினும் இலங்கையில் முன்பு தேசியத்தை பிள்ளைக்கு அளிப்பதற்கு ஆணுக்கு மட்டுமே இருந்த உரிமை தற்போது பெண்களுக்கும் உண்டென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் தாபரிப்பு தொடர்பில் 1998ல் பராமரிப்பு சட்டம் **(Maintenance Ordinance)** படி பிள்ளையை பராமரிப்பதற்கான உரிமை கணவன் மனைவி இருவருக்கும் உண்டெனவும் நெறிமுறையற்ற பிள்ளையின் பராமரிப்பு தாய்க்குள்ளது என்றும் 12 மாதத்துள் தந்தைமையை நிரூபிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

வீட்டுவன்முறை தொடர்பில்.

வீட்டு வன்முறைக்கு எதிரான சட்டம் (Domestic Violence Act (Bill) விரைவு நிலையில் உள்ளது சமூகத்தின் எந்த மட்டத்தில் உள்ளவராக இருந்தாலும் வீட்டு வன்முறை புரியப்படும் நிலை காணப்படுகின்றது. இதற்கு எதிரான சட்டமொன்றில்லாததால் தனிப்பட்ட விடயம் அல்லது குடும்பப் பிணக்கு என்று கூறப்பட்டு குற்றவாளி நழுவிவிடும் சந்தர்ப்பமே காணப்படுகின்றது.

எனவே பெண்களுக்கெதிரான பேதங்காட்டலின் அனைத்து வடிவங்களையும் இல்லா தொழித்தல் சார் இணக்க உடன்படிக்கையின் பின்னர் இலங்கையின் சட்டங்கள் சில மாற்றங்களும் திருத்தங்களும் கொண்டுவரப் பட்டுள்ளதை நாம் காணக்கூடியதாக உள்ள போதிலும் அரசியலிலும் பொதுவாழ்விலும் பெண்களுக்கான இடம் என்பது இன்னும் குறைவாகவேயுள்ளது..

கொழும்பு தமிழ்
நூலக

## பாலியல் பலாத்காரப் பயங்கரம்!



பதினைந்து மணி நேரத்துக்கு ஒரு பெண் இந்தியாவில் பாலியல் பலாத்காரத்துக் பலியாகிறாள். ஒரு நாளைக்கு ஒரு பெண் வரட்சணை காரணமாக கொல்லப் படுகிறாள். 1997ம் ஆண்டில் மட்டும் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 280. மூன்று ஆண்டுகளில் இது 450 ஆக உயர்ந்தது. இந்த ஆண்டு எவ்வளவோ! ஈவ் டீஸிங் வழக்குகள் வருஷத்துக்கு ஆயிரம் என்கிற கணக்கில் அதிகரித்து வருகிறது. பெண்கள் துளிக் கூட பயமில்லாமல் இரவிலும் நிம்மதியாக தெருவில் நடந்துபோகும் நாள் தான் உண்மையான சுதந்திர நாள் என்றார் மகாத்மாகாந்தி ஆனால் அது பொய்யாய், கனவாய், பழங்கதையாய் மறக்கப்பட்டு விட்டது.

# பிரம்மனுக்கோர் மனு

ஜெ. பாலறஞ்சனி
ஹட்டன்

புரியவில்லை!
ஒன்றுமே புரியவில்லை!
மனுசிதான் ...
ஆனாலும் புரியவில்லை!
அழுவதற்கே வாழ்க்கையா?
புரியவில்லை!

சிரிப்பரிதாரம்
பூசிப்பூசி மயக்கும்
அந்த விழிகளிலே...
உயிரின் ஓட்டம்,
உண்மை இன்பம்,
தேடித் தேடி
களைத்துவிட்டேன்.

உண்மைதான்....
எழுதாத சருக்கத்தில்
எதைப் புரட்டி தேடுவது?
வெறுமை....
எங்கும் வெறுமை
தான்.

துயர்மழையின்
நனைதலிலே....
சிரிப்பரிதாரம்
கலைந்துவிட்டால்
எழுகின்ற கணைகளுக்கு
'நோய்' என்ற
விடை உதவும்,
சோகத்தீ ரணங்களுக்கு
நோய் கூட
மருந்தாக....
நீ மருந்தை
ஊற்றாமல்
வேடிக்கை
பார்ப்பது ஏன்?
புரியவில்லை!
ஒன்றுமே புரியவில்லை!

பெண் என்ற
காவியத்தில்
இன்பச் சருக்கத்தை
ஏன் எழுத
மறந்து விட்டாய்?
புரியவில்லை!
ஒன்றுமே புரியவில்லை!
"இன்னுமோர்
ஜென்மம் வேண்டும்
அப்போது....
எம் ஆசைதனை
பகல் நட்சத்திரங்களாக்காதே
மறைப்புண்டு போக,
பகல் சூரியனாக்கு
இன்பத் தாமரைகளின்
மலர்ச்சிக்காக"
என்றுனக்கு மனு
கொடுத்தும்,
பிரம்மா..நீ
ஏற்காத கொடுமை
என்ன?
புரியவில்லை!
ஒன்றுமே புரியவில்லை!

மரணத்தின் பிடியினிலே
வசந்தத்தை தொலைத்தவர்கள்
அல்ல நாம்,
ஜனனத்தின் மடியிலேயே
தொலைத்துவிட்டு,
கூவிக்கூவி
புலம்புவதை
கேட்போர் தான்
யாரும் இல்லை....
புரியவில்லை!
ஒன்றுமே புரியவில்லை!

பூக்களுக்கு
வலிக்கும் என்றோ
முட்கள் பூத்த
பாதைதனில் பயணித்து,
ரணங்கள் பூத்த
தடங்களுடன்
நிற்கின்ற
விதியினை நாம்
இனியும் ஏற்க
முடியாது.
இன்பங்கள் உரிமை என்றால்
போராடி பெற்றிருப்போம்
விதியாமே!
அது தான்
இம் மனு உனக்கு.

அவளுக்கான தீர்ப்பிதுவா?
புரியவில்லை....?
ஒன்றுமே புரியவில்லை?
புரியாதவள் நானல்ல.
நீதான் என
புரிந்து கொண்டேன்.
பெண்மை என்னும்
மென்மை அழிந்து
உலக இயக்கம்
நிற்கும் முன்பே....
உந்தன் தீர்ப்பை
மாற்றிவிடு
பிரம்மா! எமை
வாழவிடு.



# பெண்ணின் குரல்

மார்ச் 2004 □ இதழ் 28 □ ISSN 1391- 0914 □ விலை 20/=

## சக்தி விழித்தெழுந்தால்

பெண்ணகத்ததே
இம் மண்ணின் வரலாறு.

எல்லாப் பொருளுள்ளும்
பெண்ணின் மகத்தான தன்மையெனும்
தாய் புகுந்து தொட்டிலிடும்.

இயற்கைத்தாய்!
தேசத்தாய்!
வீரத்தாய்!

இத்தாய்மையின் பிரசவிப்பே இப்பேரண்டம்!
எல்லாக் கருத்தியலின் ஆளுமையும்
அவள் கருப்பையின் விகசிப்பே!
அவள் கருப்பையில் துயின்றவைகள்
தம் உயிர்ப்பின் ஊற்றை மறந்து
அவள் கைக்கு விலங்கிடவோ?
சக்தி விழித்தெழுந்து கூத்திட்டால்
அவள் காலடியில் சங்கரன்!

*மு. பொ*